யாழ். 30/=
வன்னி 20/=

# உதயன்

சுடர்: 29 | கதிர்: 264 | வள்ளுவர் ஆண்டு: 2045 | ஆவணி 01, ஞாயிறு 17.08.2014

stay connected with: uthayan.print uthayanprint | Uthayan - A lively National Tamil Daily

Deutsch மொழி வகுப்புகள்
தற்பொழுது சுன்னாகத்திலும்
ஆவரங்காலிலும் **20.08.2014**
அன்று ஆரம்பமாக உள்ளது.
உடனே
பதிவுசெய்து கொள்ளுங்கள்.
T.P : 077 160 4823
Mrs. P.Kajenthini

17 AUG 2014
பொது சன நூலகம்

# நாட்டில் இனவாதத்தை தூண்டுகிறது பொலிஸ்



இன்று
தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சை எழுதும்
மாணவ, மாணவியருக்கு
'உதயனின்'
நல்வாழ்த்துக்கள்.

## வெட்கமே இல்லாதவர் அதன் பேச்சாளர் சாடுகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17
இனவாதத்தைப் பொலிஸாரே தூண்டி வருகின்றனர் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் பொலிஸ் பேச்சாளர், பல்கலைக்கழக மாணவன் தன்னைத் தானே தாக்கிக் கொண்டார் என்று அறிக்கை கொடுத்ததையும் சாடியுள்ளது.

'சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரான சந்திரகுமார் சுதர்சன் பல்கலைக்கழக வளாகத்தினுள் தாக்குதலுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவேளையில், பயங்கரவாதக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர். அத்துடன் அவரை ஒரு பயங்கரவாதியாகச் சித்திரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது கவலையளிப்பதுடன் கண்டனத்துக்குரியது' என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் ஒருவர் தாக்கப்பட்டதும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதும் அனைவரும் அறிந்த விடயங்கள். இது தொடர்பா

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் குடும்பஸ்தரை காணவில்லை

வவுனியா, ஓக 17
வவுனியாவில் குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா, வெளிக்குளம் பகுதியில் வசித்து வந்த ஐயாத்துரை யசோதரன் (வயது-49) என்ற குடும்பஸ்தரே காணாமற்போயுள்ளார்.
கடந்த வியாழன் நள்ளிரவு 12.45 மணியளவில் வீட்டில்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் என அடையாளப்படுத்தி அட்டகாசம்

யாழ்ப்பாணம்.ஓக 17
சிவில் பாதுகாப்பு உறுப்பினராக புதிதாக இணைந்த பாலையூர் பகுதி இளைஞன் தன்னை இராணுவம் என அடையாளப்படுத்தி அந்தப் பகுதியில் அட்டகாசம் புரிந்துவருவதால் தம்மால் எங்கு சென்றும் முறைப்பாடு தெரிவிக்க முடியாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
குறித்த இளைஞன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருடன் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக மதுபோதையில் அடிதடியில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து அந்த இளைஞன் தனது செல்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கடும் மழை

வவுனியா, ஓக 17
வவுனியாவில் வறட்சியைத் தணிக்கும் வகையில் நேற்றுக் கடும் மழை பெய்தது.
நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் பெய்ய ஆரம்பித்த மழை மாலை 5.30 மணி வரை நீடித்தது. இதனால் விவசாயிகள் உட்படப் பலரும் மகிழ்ச்சியடைந்தனர்.
வவுனியாவில் கடந்த சில மாதங்களாக மழை பெய்யாமையால் பயிர்கள் வாடின. குளங்கள், கிணறுகள் வற்றின. கால்நடைகள் நீரின்றித் தவித்தன. பொதுமக்கள் குடிதண்ணீருக்காக அலைந்து திரிந்தனர்.
இந்நிலையில் நேற்றுப் பெய்த மழையானது வறட்சியைத் தணிக்கும் வகையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
(த-402)



டிப்பர் வாகனங்களில் மறைத்து வைத்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்பட்ட முதிரை மரக் குற்றிகளை மாங்குளம் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றினர். கருங்கல், ஆற்றுமணல் ஆகியவற்றால் மறைக்கப்பட்டு மிகவும் தந்திரமான முறையில் இவை கடத்தப்பட்டுள்ளன. (விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## சிறுபான்மைக் கட்சிகள் தனித்து வெல்ல முடியாது

### ஒன்றிணைவே அவசியம் என்கிறார் பஸீர் சேகுதாவூத்

யாழ்ப்பாணம், ஓக 17
இங்குள்ள எந்தவொரு சிறுபான்மைக் கட்சியும் தனித்து நின்று தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது. ஏனெனில், இந்த நாட்டில் ஆட்சிகள், ஆட்சியாளர்கள் மாறினாலும் சிங்களக் கடும்போக்குவாதம் மாறப்போவதில்லை. எனவே சிறுபான்மை இனத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற உடன்பாட்டுக்கு முன்வரவேண்டும். அதனை வெறுமனே ஊடக அறிக்கைகளாக மட்டும் வெளியிட்டு வருவதை விடுத்து செயலில் காட்டுங்கள் என்று உற்பத்தித்திறன் அபிவிருத்தி அமைச்சர் பஸீர் சேகுதாவூத் வேண்டுகோள் விடுத்தார்.
யாழ்.நகரில் உள்ள விடுதி

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## 'டைனமற்' பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட 500 கிலோ மீன்கள் மன்னாரில் அழிப்பு

### 12 மீனவர்களுக்கு எதிராக வழக்கு

மன்னார், ஓக 17
மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் 'டைனமற்' வெடிபொருள் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட 500 கிலோ மீன்கள் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அழிக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.எஸ். மெராண்டா தெரிவித்தார்.
கடந்த வியாழக்கிழமை மாலை சௌத்பார் கடற்பரப்பில் 'டைனமற்' வெடிபொருள் பயன்படுத்தி மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கடலில் வைத்து மீனவர்கள்



12 பேரைக் கைது செய்த கடற்படையினர், அவர்கள் வைத்திருந்த 500 கிலோ மீன்களையும் பறிமுதல் செய்தனர். இவர்கள் மன்னார் பொலிஸார் ஊடாக மன்னார்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

## புலிப்பார்வையை எதிர்த்த மாணவர் மீது தாக்குதல்

### சீமானின் கட்சியே நடத்தியதாம்

சென்னை, ஓக. 17
பாலச்சந்திரனை சிறுவர் போராளியாகச் சித்தரித்து எடுக்கப்பட்டுவரும் புலிப்பார்வை திரைப்படத்தை வெளியிடக்கூடாதென்று எதிர்ப்புத் தெரிவித்து போராடிய மாணவர்கள் மீது சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியின் தொண்டர்கள் மற்றும் பாரிவேந்தன் தலைமையிலான ஐ.ஜே.கே. கட்சித் தொண்டர்கள் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
'சீமான் பார்த்துக் கொண்டிருக்கவே அவர்களது தொண்டர்கள் எங்களைத் தாக்கினர். இரும்புப் பொல்லால் தலையில் அடித்தனர். என்னுடன் போராடிய சக மாணவர்கள் மீதும் அவர்கள் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தினர்' என்று தமிழக முற்போக்கு மாணவர் முன்னணியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மாறன் தாணப்பன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்



பிள்ளைபிரபாகரனின் இளைய மகனான பாலச்சந்திரனின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் புலிப் பார்வை என்ற பெயரில் பிரவீண் காந்தியால் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் பாலச்சந்திரன் சிறுவர் போராளியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் முன்னாள்

❖ 21 ஆம் பக்கம் பார்க்க

# மடுத் தேவாலய வைத்தியசாலை ஜயலத் நினைவாகப் புனரமைப்பு

## நேற்றுத் திறந்து வைத்தார் மன்னார் ஆயர்

மன்னார், ஓக.17
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜயலத் ஜயவர்த்தனவின் 61 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மடு தேவாலய வைத்தியசாலை புனரமைப்புச் செய்து நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
மன்னார் மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற விசேட திருப்பலியைத் தொடர்ந்து வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது.
இதில் மேல் மாகாண சபை உறுப்பினரும் அமரர் ஜயலத் ஜயவர்த்தனவின் மகனுமான மருத்துவர் கவிந்த ஜயவர்த்தன மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.



இந்தத் திறப்பு விழா நிகழ்வில் மடுச் சந்தி விகாரையின் விகாராதிபதி, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மருத்துவ கலாநிதி அரவிந்தன் உட்பட பலர் பங்கேற்றனர்.
இதேவேளை மருத்துவர் ஜயலத் ஜயவர்த்தன நிதியம் மற்றும் மருதமடு வைத்தியசாலை அபிவிருத்திக் குழு என்பனவற்றின் ஊடாக மடு தேவாலய வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-14)

# படையில் சேர்ந்த தமிழ்ப் பெண் புற்றுநோய் காரணமாகவே சாவு

## சொல்கிறார் ஊடகப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஓக.17
புதிதாக இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பெண் புற்றுநோய் காரணமாகவே இறந்துள்ளார். இவரது மரணத்தில் மர்மம் இருப்பதாகக் கூறப்படும் தகவல்கள் அனைத்தும் தவறானது என்று இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் மல்லவராச்சி தெரிவித்தார்.
சிவில் பாதுகாப்புப் படையணியில் இணைந்து கொண்ட திருமுறிகண்டியைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 14 ஆம் திகதி இறந்தமை தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.
இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் இணைத்துக் கொண்டது அவர்களுக்குக் கூடிய சம்பளத்தை வழங்குவதுடன் தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதற்காகவே.
இந்த வருடம் தொண்டர் படையணிக்கு 523 பேரை இணைத்துக் கொண்டோம். இவர்களைத் தொழில் துறைகளுக்காகச் சேர்த்துக்கொண்டோம். இவர்களைத் தவிர 7 ஆவது படையணியில் 44 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.
அஜந்தா பிரசாத் என்பவர் இராணுவத்தில் இணையும் போது 154 ஆம் கட்டை, செல்வபுரம், திருமுறிகண்டி என்னும் முகவரியைத் தந்துள்ளார். இராணுவத்தில் பெண் பிள்ளைகளுக்குக் கடுமையான பயிற்சி வழங்கப்படுவதில்லை. மரியாதை செய்தல் போன்ற சாதாரண பயிற்சிகள் மட்டுமே வழங்கப்பட்டன.
இந்த வருடம் ஜூன் மாதம் 4 ஆம் திகதி இவர்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி வயிற்று வலி என இந்தப் பெண் கூறியுள்ளார். இதனையடுத்து இராணுவம் மற்றும் இராணுவத்தின் குடும்பத்தினருக்குச் சிகிச்சை வழங்கும் பலாலி வைத்தியசாலையில் இவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அங்கிருந்து கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது அவருக்கு புற்றநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
அவரது பெற்றோர்களும் வந்து பார்வையிட்டனர். புற்றுநோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி அவர் மரணமடைந்தார்.
அதனையடுத்து மருத்துவ அறிக்கையில் அவர் புற்றுநோயால் இறந்ததாக தெரிவித்ததையடுத்து இராணுவத்தில் உள்ள இறுதிக்கிரியைகளின் படி பூரண இராணுவ மரியாதையுடன் அவரது சடலம் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது - என்றார்.
இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவிக்கும்போது, 2 வருடங்களாக புற்றுநோய்க்கான மருந்துகள் எடுத்துள்ளார். புற்றுநோய் காரணமாகக் குடலில் அடைப்பினாலேயே அவர் மரணம் அடைந்துள்ளார். புற்றுநோய் இருக்கும் ஒருவருக்குக் கடுமையான சிகிச்சை வழங்க முடியாது-என்றார். (த-14)

# யாழில் நேற்றுமருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஓக.17
இருதய மற்றும் சகல விதமான நோய்களுக்கான மருத்துவ முகாம் நேற்று சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.



யாழ். மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கோம்பா நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.
இருதய நோய்கள் மற்றும் பல் வைத்தியம் உள்ளிட்ட பொது நோய்கள் தொடர்பில் விஷேட வைத்தியர் குழுவினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன.
இந்த மருத்துவ முகாமில் வட மாகாணத்தில் உள்ள பொது மக்கள் மற் றும் குழந்தைகள், பயனடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-106)

# தமிழகம் சென்றடைந்தனர் விடுதலையான மீனவர்கள்



இலங்கையில் தடுத்துவைக்கப் பட்டிருந்து, நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப் பட்ட 94 இந்திய மீனவர்களும் தமிழகத்தை சென்றடைந்தனர்.
இவர்கள் அனைவரும் நேற்றுக் காலை கடற்படையினரால் அழைத்துச் செல் லப்பட்டு, தமிழக கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
தமிழகத்தின், இராமநாதபுரம், நாகப்பட்டினம், புதுக் கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் 94 பேர் எல்லை மீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன் பிடித்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக் கப்பட்டிருந்தனர். இந்திய சுதந்திரதினத்தை முன்னிட்டு மீனவர்கள் அனைவரையும் விடுவிக்கும்படி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 13 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. (த-56)


தமிழ் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

தமிழ் பேசும் மக்களின்
ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய
அரிய பொக்கிஷம்

புதுப் பொலிவு... புதிய தகவல்கள்...

பார்த்தால் வியக்க வைக்கும்... படித்தால் மனதை அள்ளும்!

சிறப்புச் சலுகை




(இந்திய விலையின் 1.62 முதல் 3.15 வரையான விலைகளில்)

இவற்றோடு.... அழகு தமிழில் .... மலிவு விலையில்...
ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அடங்கிய
தமிழ் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கேசவன் புத்தகக் கூடம்
ரஷ்மி புக் மார்ட், யாழ்ப்பாணம்.

இன்றே விரையுங்கள்
ரஷ்மி புக் மார்ட் முன்றிலில்
யாழ். கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி
ஒகஸ்ட் 28 வரை மட்டுமே
077 222 8980 கேசவமூர்த்தி
(31009)(10.6)


# மின் நிலைய ஒயிலால் கிணறுகளில் கலந்துள்ளமை தொடர்பில் ஆராய்வு

வலி.வடக்கு, ஓக.17
சுன்னாகம் மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயிலினால் அந்தப் பகுதியில் உள்ள கிணற்று நீரைப் பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளமை தொடர்பாக நேற்று உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள், நொதேர்ன் பவர் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமரன், வட மாகாண கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.
தமது குடிதண்ணீர் உட்பட விவசாயத் தொழில் முயற்சிகள் என்பன கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
இதனைச் செவிமடுத்த அமைச்சர் மற்றும் அதிகாரிகள், உரிய இடத்துக்கு எதிர் வரும் புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு அது குறித்து இறுதி முடிவு எடுப்பது என முடிவு செய்யப்பட்டது. (த-86)

# சட்ட ஆவணங்கள் வழங்கும் இறுதி நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஓக.17
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, கிளிநொச்சி மாவட்ட செயலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான இறுதி நடமாடும் சேவை நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செய லகத்தில் நடைபெறவுள்ளதாகப் பிரதேச செய லர் திருமதி ப.ஜெயராணி அறிவித்துள்ளார். (த-18)


வெளிநாட்டில் உயர்கல்வி வேலைவாய்ப்புடன்

UK Collaboration
* University of East London
* Bedfordshire University
* CRIC - Anglia Ruskin University
* EIC - Edinburgh Napier University
* HIBT - University of Hertforshire
* ICP - University of Portsmouth
* LIBT - Brunel University
* PDIC - Plymouth University

Australia Collaboration
* James Cook University
* Curtin University
* Macquarie University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SIBT - University of South Australia

Swiss Collaboration
* HTMI - Hotel Tourism Management Institute
* European University

New Zealand Collaboration
* UCIC - University of Canterbury
* NTEC * Quantum College

Study Hotel Management in Singapore & Malaysia with part time job

Malaysia Collaboration
* APU (APIIT)
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University

Singapore Collaboration
* James Cook University
* Curtin University * MDIS

Latvia,Cyprus,Poland,Lithuania
(Europe Countries)
Low Course fee

# Entry with G.C.E O/L
# IELTS Not required **
# Very low Course fee **
# Credit Transfer to year 2 / 3 available
# Financial Sponsorships Available
** Conditions Apply

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் ......

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 4926222 , 077 3013060

## வாகன வரிப்பத்திரம் குறித்து இலவச தகவலளிக்கும் முறை

### கரவெட்டி பிரதேச செயலகத்தில்

கரணவாய், ஓக.17

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு வாகன வருமான வரிப்பத்திரம் தொடர்பான இலவச தகவலளிக்கும் செயற்பாடு கரவெட்டி பிரதேச செயலகத்தால் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தப் பிரிவுக்குட்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு அவர்கள் வாகன வருமான வரி செலுத்தும் திகதி தொடர்பாக தொலைபேசி மூலம் தகவல்கள் பரிமாறப்படவுள்ளது. வாகன உரிமையாளர்களின் கையடக்கத் தொலைபேசிகளின் இலக்கங்களைப் பெற்று அவற்றினூடாக குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்.) மூலம் உரிய தகவல்கள் வழங்கப்படு கின்றன.

அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு கிராம சேவகர்கள் பிரிவுகளூடாக வாகன உரிமையாளர்களின் விவரங்கள் சேகரிக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் பிரகாரம் கரணவாய் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி பிரதேச செயலகத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் அனைத்து வகையான (மோட்டார் சைக்கிள் உட்பட) வாகன உரிமையாளர் களையும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பாக கிராம சேவகர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அந்தப் பகுதி கிராம சேவகர் அறிவித்துள்ளார்.

அலுவலக நேரங்களில் பதிவை மேற்கொள்ள வரும்போது வாகனப் புத்தகம் மற்றும் குடும்ப அட்டைகள் என்பவற்றுடன் வரவேண்டும் என்றும் இதன்மூலம் விசேட இலவச தகவலளிக்கும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கிராம சேவையாளர் மேலும் அறிவித்துள்ளார். (த-108)

## வரியிறுப்பாளர்களிடம் அன்பளிப்பு பெறுகின்றமை நியாயமான செயலா?

### வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பெரும் அமளி

வலி.தென்மேற்கு, ஓக.17

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு வரியிறுப்பாளர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருள்கள் சம்பந்தமாக ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிரணி உறுப்பினர்களும் இணைந்து போர்க்கொடி எழுப்பியதனால் சபை மண்டபம் அதிர்ந்தது.

தவிசாளரினதும், செயலாளரினதும் செயற்பாடு குறித்து சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெற்ற காரசாரமான உரையினால் சபை அல்லோலகல்லோலப் பட்டது.

இதேவேளை, ஆளும் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கடும் சொற்போரினால் அமைதியை நிலைநாட்ட முடியாமல் திணறிய தவிசாளர், கூட்டத்தை மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்துவிட்டுச் சபை மண்டபத்தைவிட்டு வெளியேறினார்.

இதனால் மாதாந்தக் கூட்டம் எந்தவிதமான முடிவும் எட்டப்படாமல் அரைகுறையாக முடிவடைந்தது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஓகஸ்ட் மாதத்துக்கான கூட்டம் கடந்த வியாழக்கிழமை தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் ஆரம்பமானது. காலை 9.30 மணியளவில் இறை வணக்கத்துடன் ஆரம்பமான கூட்டம் தவிசாளரின் தலைமை உரையைத் தொடர்ந்து கடந்த மாத கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு திருத்தத்துடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

இதையடுத்து செயற்பாட்டு அறிக்கை செயலாளரினால் வாசிக்கப்பட்டது.

இந்த நிலையில் பிரதேச சபைக்கு வரியிறுப்பாளர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருள்கள் பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்ட போது உறுப்பினர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது.

சபையின் அங்கீகாரமின்றி- அனுமதியின்றி வரியிறுப்பாளர்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட பொருள்கள் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன் அன்பளிப்பாக வழங்கப்படும் பொருள்கள் கை இலஞ்சத்துக்கு சமம் என்று வாதாடியதுடன் 2011 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மாறாக தலைவரும், செயலாளரும் செயற்பட்டது குறித்து கடுமையாக விமர்சித்ததுடன் வாங்கிய பொருள்களைச் சம்பந்தப்பட்டவர்களிடம் திருப்பி ஒப்படைக்குமாறும் தெரிவித்தனர்.

செயலாளரினதும், தவிசாளரினதும் செயற்பாடு குறித்து கடும் தொனியில் ஆவேசத்துடன் உறுப்பினர்கள் மாறி மாறி உரையாற்றியதனால் சபை மண்டபம் அதிர்ந்தது. ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு சில உறுப்பினர்கள் தவிசாளருக்கு ஆதரவாக உரையாற்றியபோது சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.


இதேவேளை ஆளும் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கடும் சொற் போரினால் அமைதியை நிலைநாட்ட முடியாமல் திணறிய தவிசாளர் கூட்டத்தை மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்துவிட்டு சபையை விட்டு வெளியேறினார்.

இதனால் மாதாந்தக் கூட்டம் எந்தவிதமான முடிவும் எட்டப்படாமல் அரைகுறையுடன் முடிவடைந்தது. (த-5,115)

## சுகாதார மேம்பாட்டு கருத்தரங்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் அனைத்து உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான சுகாதார மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நகர சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உணவகங்கள், தேநீர்க் கடைகள், குளிர்பான விற்பனை நிலையங்கள், சிற்றுண்டி வகைகள் தயாரித்து வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், வளவாளர்களாக கலந்துகொண்டு சுகாதார மேம்பாடு தொடர்பான கருத்துரைகளை வழங்கினர். (த-9)



யாழ்ப்பாண றோட்டரிக் கழகம் அரியாலை பூம்புகார் கிராமத்தை தத்தெடுத் துள்ளது. இதன் முதற்கட்டமாக சண்முகா சிறுவர் முன்பள்ளி சிறார்களுக்கு அமரர் செல்லையா சிவபாதசுந்தரம் நினைவாகக் கல்வி கற்கும் தளபாடங்கள் கடந்த வாரம் கையளிக்கப்பட்டன. யாழ்.றோட்டரிக் கழக முன்னாள் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில் யாழ்.றோட்டரி கழக உறுப்பினர்களும் இணைந்து இதனைக் கையளித்தனர். இந்த நிகழ்வில் அரியாலை பூம்புகார் கிராம அலுவலர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த)

## மல்லாகம் சந்திப் பகுதியில் சூட்சுமமாக சாராய விற்பனை

### பொலிஸாரிடம் சிக்கினார் ஒருவர்

வலி.வடக்கு, ஓக 17

புதிய உத்தியைப் பயன்படுத்திச் சட்டவிரோதமான முறையில் கள்ளச் சாராய விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர் காங்கேசன்துறையில் இருந்து வந்த விசேட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் மல்லாகம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட சந்தியில் பொது மக்களின் தேவைக்காக சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டிக் கடையிலேயே இந்தக் கள்ளச் சாராய விற்பனை நடைபெற்று வந்துள்ளது.

குறிப்பிட்ட கள்ளச் சாராய விற்பனை இடம்பெற்ற பெட்டிக் கடைக்கு மறுபுறத்தில் தெல்லிப்பழை போக்குவரத்துப் பொலிஸாரின் சோதனை நிலையம் உள்ளது. இந் நிலையிலேயே இந்தக் கள்ளச் சாராய விற்பனையும் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதியில் உள்ள வர்த்தகர்களும், பொதுமக்களும் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்ட நபர் போயா நாள்கள் மற்றும் இரவு வேளைகளில் மிகவும் சூட்சுமமாக சாராயத்தை மறைத்து வைத்து விற் பனை செய்து வந்துள்ளார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட அவர் மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (த-86)

3,6 மற்றும் 12 மாத தவணை காலப்பகுதியில்
உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை
பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.14,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
கலைதேவன் 077 3 675 022
சுதன் 077 3 550 018
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட முதிரை மரக்குற்றிகள் சிக்கின

### டிப்பர்களுடன் பிடித்தனர் பொலிஸார்

'டிப்பர்' வாகனங்களில் மறைப்புச் செய்யப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட முதிரை மரங்களை மாங்குளம் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

மாங்குளம் பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு 'டிப்பர்' வாகனங்களில் ஒன்றில் கருங்கல்லினாலும், மற்றையதில் ஆற்று மணலினாலும் மறைக்கப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட்ட முதிரை மரங்கள் சிக்கியுள்ளன.

பல லட்சம் ரூபா பெறுமதி கொண்ட மரங்களை இலகுவில் கண்டுபிடிக்க முடியாதவாறு மிகத் தந்திரமான முறையில் கடத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நன்கு திட்டமிட்டு மரங்களைக் கடத்தும் நடவடிக்கையில் இந்தக் குழுவினர் ஈடுபட்டமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த இரு வாகனங்களின் சாரதிகளையும் கைது செய்த பொலிஸார், வாகனங்களையும் முதிரை மரங்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். குறித்த இரு சாரதிகளும் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மாங்குளம், மல்லாவிக் காட்டுப்பகுதியில் காட்டு மரங்களை அனுமதியின்றி வெட்டிய மதவாச்சியைச் சேர்ந்த குழுவினரையும் மடக்கிப் பிடித்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் கூறினர். (த-500)

## நகரப் பகுதியின் அழகுக்காக வைத்த பூச்சாடிகள் மாயம்

வலி.வடக்கு, ஓக 17

சுன்னாகம் நகரப் பகுதியை அழகு செய்யும் வகையில் கடந்த புதன் கிழமை இரவு வைக்கப்பட்ட பூச்சாடிகளில் சில நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிகாலையில் திருட்டுப் போயுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

சுன்னாகம் நகரப் பகுதியை அழகுபடுத்தும் வகையில் இராணுவத்தினர், சுன்னாகம் ஓட்டோ உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களுடன் இணைந்து பூச்சாடிகளை வைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு காங்கேசன்துறை வீதியில் வைக்கப்பட்ட சாடிகளில் சில திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-86)

# வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தின் பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவைகள் நிறுத்தம்

*ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளமையால்*

யாழ்ப்பாணம், ஓக. 17
வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை என்பன, அதற்குரிய ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளமையால் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஒப்பந்த சேவைகளை ஏனைய அமைச்சுகளின் செயலாளர்கள் நியமித்துள்ள போதும், முதலமைச்சரின் அலுவலகத்துக்கு மாத்திரம் நியமிக்கப்படவில்லை.

பாதுகாப்பு மற்றும் துப்புரவுப் பணிகளுக்குரிய நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவைடந்துள்ளது. அதற்கு முன்னதாகவே புதிய நிறுவனங்களை ஒப்பந்தம் செய்வதற்குரிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபை அமைக்கப்பட முன்னர் இவற்றைப் பிரதம செயலாளர் அலுவலகமே முன்னெடுத்தபோதும், மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் சகல அமைச்சுகளின் செயலாளர்களையும் அழைத்து இது தொடர்பிலான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதன்போது முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றுவதாகத் தெரிவித்து பின்னர் பங்குபற்றவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து ஒவ்வொரு அமைச்சுக்களின் செயலாளர்களுமே, தங்களுக்குத் தேவையான பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை என்பவற்றை ஒப்பந்தம் செய்து கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. இதற்கு முதலமைச்சரின் அமைச்சுச் செயலாளரும் இணங்கியிருந்தார். இதற்கமைய சுகாதார அமைச்சின் செயலாளர் புதிய நிறுவனங்களை ஒப்பந்தம் செய்திருந்தார்.

கல்வி, விவசாயம், மீன்பிடி அமைச்சுக்களின் செயலாளர்கள் பிரதம செயலாளர் அலுவலகத்தினூடாகத் தமக்கு புதிய ஒப்பந்தங்களை மேற்கொண்டு தருமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அந்த அமைச்சுக்களுக்குப் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் அமைச்சுக்கு கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களுடனான ஒப்பந்தம் முடிவடைந்த போதும் நேற்று முன்தினம் 15 ஆம் திகதி வரை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

முதலமைச்சரின் அமைச்சின் செயலாளரினால் புதிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாத நிலையில் நேற்று முன்தினத்திலிருந்து பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)


**முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும் 50 ஆவது பிறந்த நாள் நினைவும்**



அமரர் மாசிலாமணி ஜெகதீஸ்வரன்
(ஆனந்தன்-வியாபாரி)

என்றென்றும் எம்முன்னே
ஏற்றம் தர வந்தவரே
எம்மை வீட்டு பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
எந்த வேளையும் எம் நெஞ்சில்
வாழ்வாங்கு வாழ்வீரே.

நீர் ஏற்றி வைத்த தீபங்கள்
பிரகாசமாய் பாரினிலே ஒளிவீசும்
பாதைகள் உருவாக்கியவரே
நாங்கள் பாக்கியம் செய்தவர்கள்
உம் மடியில் பயின்றதால்.

20, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(51071)(10)

**ரயர் கடைக்கு உடனடியாக வேலை ஆள் தேவை.**
ரயர் வேலை செய்யத் தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 290, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(51069) (10) T.P: 0777 148 884, 021 222 4523, 077 6511 693.

**மரண அறிவித்தல்**



**திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன்**

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இல. 91 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன் (15/08/2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பியப்பா செந்தில்நாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ் சென்றவர்களான தம்பியப்பா சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பத்மலோஜினி மற்றும் சர்க்குணம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌசல்யா, அகலியா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன், வாசவன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரகல்யா, பிரியங்கா, பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P 021 205 2201 (51066)
தகவல்:
தம்பியப்பா செந்தில் நாதன் (கணவர்)


# தௌஹீத் ஜமாத் மீது உரிய சட்ட நடவடிக்கை

*எடுக்கக் கோருகிறது ஹெல உறுமய*

கொழும்பு, ஓக, 17
ஜாதிக ஹெல உறுமய அமைப்புக்கு சட்டமும் அரசியலும் தெரியாது. அது வெறும் இனவாத அமைப்பு என தௌஹீத் ஜமாத் அமைப்புத் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறிய தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய தனது கோரிக்கையில்,

'பொது பலசேனா, சிங்கள ராவய மற்றும் தௌஹீத் ஜமாத் ஆகிய அமைப்புக்களுக்கு கடந்த 13ஆம் திகதி கொழும்பு மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளில் ஊர்வலங்கள் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இந்த உத்தரவையும் மீறிய தௌஹீத் ஜமாத் அமைப்பினர் கொழும்பு மாளிகாவத்தைப் பிரதேசத்தில் ஊர்வலம் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அன்றைய தினம் நடத்தியிருந்தனர். இந்த செயற்பாட்டுக்கு உடனடியாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்' எனத் தெரிவித்திருந்தது.

ஜாதிக ஹெல உறுமயவின் இந்தக் கோரிக்கை தொடர்பில் தௌஹீத் ஜமாத் அமைப்பினர் உதயனுக்கு கூறுகையில்,

'ஜாதிக ஹெல உறுமயவிற்கு நீதிமன்ற உத்தரவு என்னவென்றே தெரியவில்லை. அவர்களுக்கு சட்டம், அரசியல் தொடர்பில் நாங்கள் கற்பிக்க வேண்டும். அவர்களுக்கு இனவாதம் தெரிந்த அளவிற்கு அரசியலும் சட்டமும் தெரியவில்லை. நீதிமன்ற உத்தரவின்படி கொழும்பு புறக்கோட்டை மற்றும் புறக்கோட்டை ரயில் நிலையத்தை அண்டிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு காரணம் அந்த இடத்தில் வேறு ஒரு அமைப்பினர் குறித்த தினத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவிருந்தனர். நீதிமன்றம் வேறொரு அமைப்பு எனக் குறிப்பிட்டது பொதுபலசேனா வைத்தான். பொதுபலசேனாவும் தௌஹீத் ஜமாத்தும் ஒரே இடத்தில் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்தினால் குழப்பம் ஏற்பட்டு மோதல் சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற காரணத்தினாலேயே நீதிமன்றம் அவ்வாறான தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

தௌஹீத் ஜமாத் தன்னிச்சையாக இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவில்லை. கொழும்பு மற்றும் மாளிகாவத்தைப் பொலிஸ் உயர் அதிகாரிகளின் அனுமதியுடன்தான் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம். நாம் குற்றவாளிகள் என்றால் ஏன் இதுவரை தௌஹீத் ஜமாத் அமைப்பினர் ஒருவர் கூட கைது செய்யப் படவில்லை? இனவாதத்தை தூண்டும் ஜாதிக ஹெல உறுமய சிந்திக்காமல் பேசுவதை முதலில் நிறுத்த வேண்டும்' எனத் தெரிவித்துள்ளனர். (த-10)


**பணியாளர் தேவை**
வடிவமைப்பாளர்
★ Photoshop ★ Coral Draw
(முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்) (C/16076) (10)
முர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
82/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வேலையாள்கள் தேவை**
மில்லுக்கு வேலையாள்கள் தேவை. சாம்பலும் உண்டு (இலவசம்)
மாப்பியன் மில்
T.P: 07777 222 15 (51068) (10)

**காணி விற்பனைக்குண்டு**
கோப்பாய் தெற்கு, மாதா கோவில் அருகில் (புதிய VC இற்கு அருகில்) இரண்டு (2) பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: (51067) (10)
077 834 9694, 077 694 5921

**பணிப்பெண் தேவை**
வயோதிபப் பெண்ணை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை
T.P: 077 837 8597 (51062) (10)

**சித்தியடைந்து சாதனை படைக்க**

**வாழ்த்துகின்றோம்**

**இன்று தரம் 5 அரச புலமைப் பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் புலமைச்சுடரும் சுடர் ஒளி குழுமமும் தமது வாழ்த்துக்களையும் ஆசீர்வாதகளையும் தெரிவித்துக்கொள்கின்றது.**

*முக்கிய குறிப்பு:*
தற்போது தரம் 3, 4 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைச்சுடர் கையேடு இரட்டைப்பயனுடன் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் வெளிவருகிறது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றது.

**உங்கள் பிரதிக்கு முகவர்கள் மூலம் பதிவு செய்து கொள்ளுங்கள்**

புலமைச்சுடர் நிர்வாகம்

மணிவிழா கண்டு மாண்புறும் நாயகனை
மனதார வாழ்த்திடுவோம்



உயர்திரு.
வே.க.கணபதிப்பிள்ளை
அவர்கள் இ.க.நி சேவை-து
அதிபர் யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
ஆசிரியராக (அதிபர் சேவை தரம் 1)
விரிவுரையாளராக, உப அதிபராக, அதிபராக
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நற்பணியாற்றி...
இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் சேவையாற்றும் ஆசிரிய மணிகளை உருவாக்கிய பெருந்தகை... ஆசிரிய மாணவர்களின் நல்லாசானாகவும் நற்தோழனாகவும், நற் தந்தையாகவும் ஆதரித்து அறிவு புகட்டி துன்பம் வரும் போது நல்வழிகாட்டி ஆசிவழங்கும் ஆசான் மணிவிழா கண்டு மாண்புறும் இந்நாளில்... நோய் நொடியின்றி நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/உமையாள்புரம் அ.த.க. பாடசாலை, ஆனையிறவு, பளை.

## பங்குதாரர்கள் தேவை

Blooming Buds பாடசாலையில் மேலதிக வகுப்பறை வசதிகள் காணப்படுகின்றன. ஆசிரியர் பயிலுநர் வகுப்பறை தெமட்டகொடை கொழும்பு 10 இலும் காணப்படுகின்றது. எங்களது நிறுவனத்தை நாடெங்கிலும் பரவ 5 லட்சம் முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர்கள் தேவை. முதலீடு செய்பவர்களுக்கு பங்குலாபமும், நிறுவனத்தில் பங்காளர் பதவியும் வழங்கப்படும். இந் நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புவோர் இந்த முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.
Sri dhamma Mawatha, Colombo-10. (சி/15776) (4.6.3)
077 469 0044 / 077 152 9731 Government Reg.No.Pv 94034

நல்லூர்க் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை

அனைத்து வகையான பூங்கன்றுகளும் அதிரடி விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ் அக்கூரியம் அன்ட் பிளான்ற் பரடைஸ்
917, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
021 561 1242 (50880) (12.3.6)

## காணி விற்பனைக்கு

பன்னாலை "தச்சன்புலம்" பரப்பு 24 கிணற்றுடன் வீடு கட்ட, தோட்டம் செய்யக்கூடிய இருபக்கம் கிராமசபை ஒழுங்கையும் ஒரு பக்கம் பாதையும் உடைய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 4004 (50214) (12.3.6)

## அற்றோணித் தத்துவத்தை ரத்துச் செய்தல்

பாலசிங்கம் செல்வரத்தினமும் பெண் சியாமளா இன்பமதியும் ஆகிய நாங்கள் 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் அ.க.நடராசா முகதாவில் 9634ஆம் இலக்கத்தில் கந்தசாமி பாலசிங்கத்துக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் ரத்துச் செய்கின்றோம். விளம்பரத் திகதியில் இருந்து அற்றோணித் தத்துவத்தின் மூலம் அவரினால் செயற்படுத்தும் எந்த ஒரு மாற்றமும் செல்லுபடி ஆகாது என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.
பாலசிங்கம் செல்வரத்தினம் (50817) (7.6.3)

## சேவைநயப்பு பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




கந்தப்பிள்ளை
சிவபாதம்
(Sp.Trd. Maths, SLTS I)
(கணிதபாட இணைப்பாளர்)
பிறந்த திகதி:
1954.08.18
கற்ற பாடசாலை
ஆரம்பக் கல்வி :
யா/வியாவில் சைவ வித்தி.
உயர்கல்வி :
யா/தியாகராஜா ம.ம.வித்தி.

கற்பித்தல் சேவை விவரம்:

| | |
|---|---|
| 1979.03.12 | ப/கனவரள்ள GTMS, பண்டாரவளை |
| 1981.05.25 | ப/பதுளை சரஸ்வதி ம.வி |
| 1983.01.31 | ஆசிரியர் கலாசாலை, பலாலி |
| 1985.01.01 | அ/கட்டியாவ அஸாத் முஸ்லிம் வித்தி, அநுராதபுரம் |
| 1988.02.05 | யா/ஸ்கந்தவரோதய கல்லூரி |
| 1990.03.02 | யா/ஆனைக்கோட்டை RCTMS |
| 1991.02.06 | யா/நவாலி மகா வித்தியாலயம் |
| 1995.03.14 | யா/அட்டகிரி சைவ வித்தி. |
| 2005.02.09 | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |

சேவையின் பணிதலுக்கு ஒரு பாராட்டு அதுதான் "வைர விழா"
வைரங்களைப் பட்டைதீட்டி செதுக்கிய - சிற்பியே!
காலம் கண்டு கருமமாற்றிய கருமேகம்
புலரிய பொழுதிலே புன்முறுவலுடன் புகுவார் - வகுப்பறையுள்
அலரா அரும்புகளை அன்றலர்த்த மலராக்கினார்
மணி ஒலிக்கு செவிசாய்க்காது கணிதமானது மணிக்கணக்காய் - ஊட்டி
விதிதெரியா மழலைகளை பல்கலை அனுப்பிய - குருநாதர்
வெற்றுக்குடங்களை நிறைகுடங்களாக்கிய - துரோணர்
வெறும் பட்டைகளைச் செதுக்கி வைரமாக்கிய - வைரம்
திசைகளைத் தீட்டி தீபமேற்றிய - ஏணி
உன் ஏணியால் உயர்ந்து ஏணிகளாய் இருப்போர் பல்லாயிரம்
அகவையறுபது - மணிவிழா காணும்
தங்களின் வாழ்வும் குடும்பமும் சிறக்க
இறை ஆசியுடன் வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் கழகம்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)
(C/16043)(7.6.3)

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-
'கந்தரலங்காரம்' என்ற தலைப்பில் இரா.செல்வ வடிவேலின் சிறப்புச் சொற்பொழிவும் இணுவில் ஸ்ரீசிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை, சங்கரத்தை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் அறநெறிப் பாடசாலை, கட்டுவன்ஸ்ரீ சிவலோகபதி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, தொண்டமானாறு பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மற்றும் சண்டிலிப்பாய் சாந்தை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஓ-7)

♦♦♦

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - எஸ். கோபிதாஸின் மாணவர்கள் வழங்கும் வயலின் இசை, மிருதங்கம் - வி.ரமணா, கெஞ்சிரா - பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தர சர்மா, தபேலா - எஸ்.விமல்சங்கர்.
அடுத்த நிகழ்வாக வயலின் சொலோ: வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - ஜி.கண்ணதாஸ், கெஞ்சிரா - பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தர சர்மா, முகர்சிங் - எஸ்.செந்தூரன். (ஓ)

♦♦♦

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு மெண்டலீன் இசை கானம் இடம்பெறும். பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் சிவகுமார் சர்மா நிகழ்வில் பங்கு பற்றுகின்றார். (ஓ)

♦♦♦

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'பாதுகாபட்டாபிஷேகம்' இசைப் பேருரை இடம் பெறும். (ஓ)

♦♦♦


யாழ்ப்பாணம் சின் மயாமிஷன், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையுடன் இணைந்து நடத்தும் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்க மான ஆன்மிக அருளுரை நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'சந்நியாசம்' என்பதாகும். (ஓ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக.17
சர்வதேச மார்க்சிச குழுவின் ஏற்பாட்டில் '1953 ஆம் ஆண்டின் ஹர்த்தாலின்' 61 ஆம் ஆண்டு நினைவு தின கலந்துரையாடல் இன்று மாலை 4.30 மணிக்கு யாழ்.ஆரிய குளம் டி.சி.எம். தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முற்போக்கு ஆர்வலர்கள் உரையாற்றுவார்கள் என்றும் ஆர்வலர்கள் பங்குபற்ற முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-10)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக.17
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)



பதினாறாம் நாள் திருவிழா

## "வேலவன் மகிழ்வது கார்த்திகைத் திருவிழாவிலே"

நல்லைக் கந்தன் நலம் பல தருவது
கார்த்திகைத் திருநாளிலே
நாடிடும் அடியவர் துயரெல்லாம் தீர்ப்பது
கார்த்திகைத் தீப ஒளியினிலே
வித்தகர் கூடி இசை மழை பொழிவது
கார்த்திகைத் திங்களிலே
துன்பம் துடைத்தருள சுந்தரிகளிருவருடன் வருவது
கார்த்திகை நன்னாளிலே
வேத இசை முழங்க வேலவன் மகிழ்வது
கார்த்திகைத் திருவிழாவிலே

*க.லோகேஸ்வரன்.*

## திருக்கார்த்திகை தீபம் ஏற்றுவோம்

திணைப்புனத்து வள்ளி குறமாதை
திருவிளையாடல் செய்து மணம் புரிந்தவனே
தினைமாவோடு தேனும் சர்க்கரையும் சேர்த்து
திருக்கார்த்திகையில் மாவிளக்கேற்றிடுவோம்
வினைகள் தீர்ந்திடவும் வீரம் விளைந்திடவும்
வெற்றி கிடைத்திடவும் வேண்டுதல் பலித்திடவும்
மனைகள் தோறும் மங்கலம் பொங்கிடவும்
மாண்புமிகு நல்லூர்நாதா வரமருளிடுவாய்

*ஏழாலை மு. இந்திராணி*

### கார்த்திகை ஊர்தியில் காவல் செய்ய வருகிறான்

கார்த்திகை நாதனே காத்திட வேண்டும்
காரியம் யாவும் நிறைவேற்றிட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தரத் தீர்வைத் தந்திட வேண்டும்
ஏத்தியே நாளும் முறையிட்டு நிற்கிறோம்
ஈழவரெம் வேண்டுதலை ஏற்றிட வேண்டும்
போற்றியே துதித்தென்றும் வாழ்ந்திட வேண்டும்
புதியதோர் தீர்வு தமிழருக்கு வேண்டும்

*காரை எம்.பி. அருளானந்தன்*

### அரோகரா அரோகரா என்றுரைப்போம்

அலங்காரக் கந்தனானாலும்
அர்ச்சனையில் மாற்றமில்லை ஐயா!
அடியார்களின் குறை தீர்க்கும் கந்தனின்
அன்புக்கு நல்லை வாழ் குமரனுக்கே - யாம்
அரோகரா அரோகரா என்றுரைப்போம்

*அரியாலையூர் செல்வி நிஷாந்தி செல்வராஜா*




திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016 / 021 568 9090

## இளநீர் பறிக்க மரத்தில் ஏறியவர் விழுந்து சாவு

மாங்குளம், ஓக.17
ஆலய பூசைக்காக தென்னை மரத்தில் ஏறி செவ்விளநீர் பறிக்க முற்பட்ட வேளை தவறி வீழ்ந்ததில் 4 பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கச்சடம்பன் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.
கச்சடம்பன் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் மதியழகன் (வயது-40) என்பவரே இவ்விதம் உயிரிழந்துள்ளார்.
கச்சடம்பன் கிராமத்துக்கு அருகிலுள்ள பெரிய புளியங்குளம் கிராமத்திலுள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தின் விசேட பூசைக்காக இளநீர் பறிப்பதற்காக மரத்தில் ஏறிய போதே தவறி வீழ்ந்து தலையில் காயமுற்ற இவர் மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் இடைவழியில் அவரது உயிர் பிரிந்து விட்டது. (த-422)

## லேகியம் விற்ற வர்த்தகருக்கு மறியல்

தென்மராட்சி, ஓக. 17
போதைப்பொருளான ஒரு வகை லேகியத்தை விற்பனை செய்த வர்த்தகரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து கொடிகாமம் சந்தைப் பகுதியில் உள்ள பெட்டிக் கடையொன்றில் அவர்கள் சோதனை நடத்தியபோது போதைப்பொருளான 50 லேகிய உருண்டைகளைக் கண்டுபிடித்தனர்.
மிருசுவில் தெற்கைச் சேர்ந்த இந்த வர்த்தகருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் வர்த்தகரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## ஹஸன் மௌலவியின் இடத்துக்கு லாஹிர்


காலஞ்சென்ற ஹஸன் மௌலவியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு சட்டத்தரணி லாஹிர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.
மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட லாஹிர் கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு ஹஸன் மௌலவிக்கு அடுத்த நிலையில் விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். கிழக்கு மாகாண சபைக்கு திருகோணமலை மாவட்டம் சார்பாக 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். (ஓ-40)

# கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு பிரதிநிதித்துவம் அதிகரிப்பு

### முதன்முறையாக இராணுவ அதிகாரி ஒருவரும் நியமனம்



கொழும்பு, ஓக.17
இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையிலும், பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவை இலங்கை விருத்தி செய்து வரும் நிலையிலும், கொழும்பில் உள்ள தனது தூதரகத்தில் பாதுகாப்புப் பிரிவின் பிரதிநிதித்துவத்தை இந்தியா வலுப்படுத்தியுள்ளது.
சீனா, கொழும்பில் உள்ள தனது தூதரகத்தில் முதல் தடவையாக பாதுகாப்புத் துறை இணைப்பாளர் ஒருவரை அண்மையில் நியமித்தது. இது இலங்கை - சீன இராணுவ உறவில் மிக முக்கிய மாற்றத்துக்கான முதல் நகர்வு என சில தரப்புக்களினால் விமர்சிக்கப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியிலேயே இப்போது, அதற்குப் பதிலடியாக இந்தியா, கொழும்பில் உள்ள தனது தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் பிரிவை வலுப்படுத்த எத்தனித்திருப்பதாகக் கருதப்படுகின்றது.
இந்த விடயம் தொடர்பில் செய்தி ஏஜென்ஸிகளின் தகவல்கள் வருமாறு:-
கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக இந்தியக் கடற்படையைச் சேர்ந்த கப்டன் பிரகாஸ் கோபாலன் பணியாற்றி வருகிறார். அவருக்கு உதவியாக, பிரதி பாதுகாப்பு ஆலோசகராக இந்திய இராணுவத்தைச் சேர்ந்த கேணல் குரிந்தர் எஸ். கிளேயர் நியமிக்கப்பட்டுள்ளார்.
இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்புப் பிரிவில், இரா ணுவத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படுகின்றமை இதுவே முதல் முறையாகும்.
கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக இந்தியக் கடற்படை அதிகாரிகள் நியமிக்கப்படுவதே இதுவரை வழக்கமாக இருந்து வந்துள்ளது. அத்துடன் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியும் இதுவரை நடைமுறையில் இருக்கவில்லை. அண்மைக் காலமாக, சீன, பாகிஸ்தானிய, இந்திய இராணுவத் தளபதிகள் இலங்கைக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.
கடந்த மே மாதம், சீனாவின் மத்திய இராணுவ ஆணைக் குழுவின் உதவித் தலைவரும், சீன விமானப்படையின் தளபதியுமான ஜெனரல் சூ கியூஇலியாங்கும், அதே மாதம், சீன ஆயுதப்படைக் காவல்துறையின் தலைமை அதிகாரி லெப்.ஜெனரல் நியூ சிசோங்கும் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். திருகோணமலையில், விமானப் பராமரிப்பு நிலையம் ஒன்றை சீன உதவியுடன் அமைப்பதற்கு இலங்கை தீர்மானித்துள்ள நிலையிலேயே இவர்களின் பயணங்கள் இடம்பெற்றுள்ளன. இது இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு விரோதமானது என்று புதுடில்லி கவலை கொண்டுள்ளது. (ஓ)



யாழ். புனித மரியன்னை பேராலய வருடாந்த விண்ணேற்பு திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாலை நடைபெற்ற ரத பவனியில் அன்னை வீதி வலம் வந்து மக்களுக்கு ஆசீர் வழங்கினார். (ஓ-135)

# விவசாயிகளே குளத்தை ஆழமாக்கி பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் நிலை

தென்மராட்சி, ஓக.17
தமது விவசாய உற்பத்திப் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டதால் விவசாயிகள் ஒன்றிணைந்து 'பைக்கோ' இயந்திரம் மூலம் குளத்தை ஆழமாக்கி பயிர்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர்.
சாவகச்சேரி, கல்வயல், விளைவேலி, புல்லாந்திக்குளத்தில் தேங்கும் நீரைப் பயன்படுத்தி அதனுடன் அண்டிய பகுதியில் உள்ள 100 இற்கு மேற்பட்ட விவசாயிகள் வருடாவருடம் விவசாயப் பயிர்களை உற்பத்தி செய்து வந்துள்ளனர்.
கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் குளத்தில் நீரின்றி அயலில் உள்ள கிணறுகளிலிருந்து பெறப்பட்ட நீரைப் பயன்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.
குறித்த குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததால் தூர்வாரிய நிலையில் காணப்படுகிறது. நீரில்லாத வேளையில் குளத்தை ஆழமாக்கித் தருமாறு குறித்த பகுதி விவசாயிகள் தென்மராட்சி பிரதேச செயலகம், யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம், சாவகச்சேரி நகர சபை ஆகிய வற்றுக்கு முறையிட்டபோதிலும் எந்தவொரு செயற்பாடும் இடம்பெற வில்லை.
சாவகச்சேரி நகர சபையினர் குளத்தைப் புனரமைக்க 2 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அது குறித்து இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை.
இந்த நிலையில் தம்மால் பயிரிடப்பட்ட விளைபயிர்களைப் பாதுகாக்க குளத்தை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஒன்றிணைந்து நிதி வழங்கி 'பைக்கோ இயந்திரம் மூலம் குளத்தை ஆழமாக்கியுள்ளனர். குளத்தில் தற்போதுள்ள நீரின் மூலம் பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். அரசை நம்பியிருந்த எமக்கு பெரும் நட்டம் ஏற்படவிருந்த நிலையில், அனைவரது ஒன்றிணைந்த முயற்சியால் தலை தப்பிவிட்டது என்றனர் விவசாயிகள். (ஓ-9)



## காலியில் 'எயிட்ஸ்' பரவும் அபாயம்

கொழும்பு, ஓக.17
காலி மாவட்டத்தின் கிராமப்புற பிரதேசங்களில் எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் வேகமாகப் பரவி வரும் அபாயம் காணப்படுகிறது என்றும், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோர் தரப்பினர் இந்த நோய்களுக்கு இரையாகிவிடக்கூடும் என்றும் தென் மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரான பத்தேகம தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார். மஹமோதர வைத்தியசாலையின் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பாலியல் நோய்கள் தொடர்பான பெண் வைத்தியர் ஒருவர் இந்தத் தகவல்களைத் தமக்குத் தெரிவித்ததாகக் கூறுகிறார் தேரர்.
காலி மாவட்டத்தின் கிராமப் புறங்களிலேயே எயிட்ஸ் நோயாளர்கள் சிக்கியுள்ளனர். இது பாரதூரமானதொரு நிலைப்பாடாகும். இது பற்றி சுகாதார அதிகாரிகள் போன்றே பொது மக்களும் கடும் அவதானத்துடன் இருக்க வேண்டியுள்ளது. பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தின் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதே இந்த நோய்கள் பரவுவதற்குக் காரணமாகியிருப்பதாகவும் தேரர் கூறுகிறார்.
இது சம்பந்தமாக பாடசாலை மாணவர்களுக்கும் இளையோர் தரப்பினருக்கும் விஞ்ஞான ரீதியிலான தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது. உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அவர்கள் தமக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவிக்கின்றனர். எனவே நிச்சயமாக இது சம்பந்தமாக விஞ்ஞான ரீதியிலான அறிவூட்டல் ஒன்று அவர்களுக்கு அவசியமாகின்றது. அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர் ஒருவர் மூலமாக இவர்களுக்கு இது பற்றி தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.
ஒரு கால கட்டத்தில் சீனாவில் இது போன்ற ஆள்கொல்லி நோயொன்று பரவியிருந்தது. ஆனாலும் அது தொடர்பாக ஊடகங்கள் மூலம் பிரசாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஓ-22)


# இலங்கை வங்கி 75 ஆம் ஆண்டு நிறைவு; மாபெரும் பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக.17

இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். இலங்கை வங்கியினால் பிரமாண்டமான பேரணி ஒன்று நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

மாட்டுவண்டில், சிலம்பு, பொய்க்கால்குதிரை, காத்தவராயன் கூத்தின் ஒரு பகுதி என தமிழ் மக்களின் பாரம்பரிய நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்தப் பேரணியில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இலங்கை வங்கி ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

காலை 9.00மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி ஆஸ்பத்திரி வீதி ஊடாகப் பஸ் நிலையத்தைச் சென்றடைந்து அங்கு 75 ஆவது நிறைவை ஒட்டி பலூன் பறக்க விடப்பட்ட பின்னர் கே.கே.எஸ் வீதி, சிவன் கோவில் வீதி, கன்னாதிட்டி வீதி வழியாக ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்து ஆரியகுளம், பருத்தித்துறை வீதியூடாக மீண்டும் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியைச் சென்றடைந்தது. பறக்கவிடப்பட்ட பலூன்கள் சிலவற்றில் 1000 ரூபா பெறுமதியான காசோலை இருப்பதாகவும் அதனை எடுத்தவர்கள் இலங்கை வங்கிக் கிளைகளில் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இலங்கை வங்கியினர் தெரிவித்தனர். (த-7,10,20,86)




# வாய்ச் சுகாதாரம், பற்சிதைவை தடுக்க க்ளோகார்ட் விழிப்புணர்வு



தேசத்தின் நம்பிக்கையை வென்ற வாய்ச் சுகாதார வர்த்தக நாமமான க்ளோகார்ட், பற்சிதைவை தவிர்க்கும் வகையிலான தேசிய மட்ட செயற்றிட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையில் மிகவும் பொதுவாக காணப்படும் பற் சுகாதாரம் தொடர்பான பிரச்சினையாக பற்சிதைவு காணப்படுகிறது. இது பெருமளவு கட்டுப்படுத்தப்படக்கூடியது. க்ளோகார்ட் புதிய விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு பற்சிதைவின் காரணமாக வாழ்வில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றிய விளக்கங்களை வழங்கி, பொது மக்களையும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் பற்சிதைவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

ஹேமாஸ் மெனுபக்சரிங் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரேரய் ஜோசப் கருத்துத் தெரிவிக்கையில்,

பற்சிதைவு என்பது தேசிய மட்டத்தில் காணப்படும் பிரச்சினை என்பதை க்ளோகார்ட் நன்கு அறிந்துள்ளது. பொறுப்பு வாய்ந்த வாய்ச் சுகாதார வர்த்தக நாமம் என்ற வகையில், தேசிய செயற்றிட்டங்களை முன்னெடுப்பதன் மூலம், பொது மக்கள் மத்தியில் பற்சிதைவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, பற்சிதைவிலிருந்து விடுபட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த தேசிய செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் கடமை எமக்கு உள்ளதென்பதுடன், இலங்கையில் பற்சிதைவை தடுக்கும் முதல் தர வர்த்தக நாமம் என்ற வகையில், இலங்கை நுகர்வோரின் தேவைகளை புரிந்து கொண்டு தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது என்றார்.

பற்சிதைவைத் தடுப்பதன் முக்கியத்துவத்தை சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தி வருவதுடன், ஆரம்ப நிலையிலேயே தடுப்பை மேற்கொள்வது முக்கியத்துவம் வாய்ந்தது. இதனைச் செயற்படுத்த தேசிய மட்ட செயற்றிட்டமொன்றின் அவசியம் காணப்படுவதையும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

க்ளோகார்ட், குடும்பங்கள் மத்தியில் பற்சிதைவு தவிர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவ்து பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையை கட்டியெழுப்ப முக்கிய பங்காக அமைந்திருக்கும்.

சுகாதார அமைச்சின் பற் சுகாதார சேவைகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜயசுந்தர பண்டார கருத்து தெரிவிக்கையில், பற்சிதைவு என்பது சுகாதார அமைச்சின் அதிகளவு கவனத்தைப் பெற்ற பிரிவாக அமைந்துள்ளது. வயது முதிர்ந்த நிலையில் பற்களை இழப்பது என்பது 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் 22 வீதத்துக்கும் அதிகமானதாக அமைந்துள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் மத்தியில் ஒரு பல்கூட இல்லாமை கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, பற்சிதைவுக்கு எதிராக போராடுவது என்பது தேசிய மட்ட செயற்றிட்டமாகும். சுகாதார அமைச்சு இந்த செயற்றிட் டத்தை முழு மூச்சுடன் நாட்டில் முன்னெடுக்கிறது- என்றார். (த)



ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பி.மகேந்திரன் என்பவரது மரண இழப்பீட்டுக்கான கொடுப்பனவை அதன் வவுனியா கிளையில் வைத்து அவரது மனைவியான மகேந்திரன் சிவமலர் என்பவருக்கு வழங்கியது. வவுனியா உதவிக் கிளை முகாமையாளர் க.லோஜசங்கர் இதனை வழங்கினார்.. அருகில் முகவர் தலைவர்களான யோ.நிரோஜன், நி.நிசாந்தன், திருமதி சி.மரிஸ்டலா, காப்புறுதி ஆலோசகர்களான அ.லோகமலர், க.புவனேஸ்வரி, ர.நோயல், சூ.தனக்குமார், வி.சயூரன் ஆகியோர் உள்ளனர். (த)

# லங்கெம்மின் 'அகுவா சீல்ட்'

புதிதாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு பெரும் சிறப்புடனும் கரகோசத்துக்கு மத்தியிலும் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சுதந்திர சதுக்க நடைச்சாலை கட்டடத் தொகுதியின் விலைமதிக்க முடியாத மரவேலைப்பாடுகள் மற்றும் மரத்திலான உட்புறச் சுவர்பரப்பு முழுவதையும் லங்கெம் றொபியலக்கின் 'அகுவா சீல்ட்' என்ற நீரை அடிப்படையாகக் கொண்ட மரப் பராமரிப்பு உற்பத்தி வகைகள் பெருமையுடன் பாதுகாத்து, மேலும் பலப்படுத்துகின்றது..

கொழும்பிலான கடந்தகால காலணித்துவ ஆட்சியின் மீதமிருக்கும் நினைவுச் சின்னமாக காணப்படும் இந்தக் கட்டடம் உண்மையில் சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போல மீண்டெழுந்து இன்று, புதிதாக புத்தெழுச்சி பெற்றிருக்கும் தலைநகரின் கம்பீரம் பொருந்திய காவலாளியாக தலைநிமிர்ந்து நிற்கின்றது.

லங்கெம் சிலோன் பி.எல்.சி. நிறுவனத்தின் பணிப்பாளர் றுவான் ரி. வீரசிங்க கூறுகையில், 'எமது நிறுவனம் இவ்வருடம் 30ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற நிலையில் இந்த வரலாற்றுப் புகழ்மிக்க கம்பீரமான கட்டடத்தின் உட்புறப் பகுதிக்கு பூசுவதற்கான உத்தியோகபூர்வ வர்ணப்பூச்சு (பெயின்ட்) விநியோகஸ்தராக தேர்ந்தெடுக்கப்பட்டமை தொடர்பில் பெருமிதம் அடைகின்றோம். இந்தப் பாரம்பரிய கட்டடமானது ஒப்பீட்டளவில் சீர்கெட்ட நிலையில் காணப்பட்ட ஒன்றாக இருந்தது. எனவேதான், அனைத்து உட்புற மேற்பரப்பினதும் நிலைமையை நாம் மிகக் கவனமாக மதிப்பீடு செய்தோம். அதன்படி அதனது வரலாற்றுச் சிறப்பை மேம்படுத்துகின்ற



அதேவேளை நீண்டகாலம் நீடித்திருக்கும் தன்மையையும் உறுதிப்படுத்தக் கூடியதுமான தீர்வை நாம் தேர்ந்தெடுத்தோம்' என்றார்.

'இதுபோன்ற பாரம்பரிய கட்டடங்களில் மரத்திலான மேற்பரப்புக்களைக் கொண்ட ஜன்னல்கள், கதவுகள், படிக்கட்டுக்கள், படிக்கட்டு கைப்பிடிகள், கூரையின் உட்பகுதி மற்றும் வேலைப்பாடுகள் நிறைந்த தரை போன்றவை அதிகளவில் காணப்படும். இவையனைத்தும் தனித்தன்மையான ஆக்கக்கூறுகளை வெளிப்படுத்துவதாக காணப்படுவதுடன், தினசரி பயன்பாட்டில் தேய்வடைவனவாகவும் உள்ளன. ஆகவேதான் சர்வதேச சிறப்புத்துவமிக்க, நீரை அடிப்படையாகக் கொண்ட எமது 'அகுவா சீல்ட்' உற்பத்தித் தொடரில் நம்பிக்கை ஃவத்தோம். இவற்றுள் - வெளிப்புற நிறப்பூச்சு (பர்மா தேக்கு மற்றும் வல்நட்), வெளிப்புற உயர்ரக மேல்பூச்சு, வெளிப்புற தரையமைப்பு பூச்சு, உட்புற தரையமைப்பு பூச்சு, வூட் புற்றி வர்ணங்கள் மற்றும் அகுவா சீல்ட் வன்மையாக்கும் உற்பத்திகள் போன்றவை உள்ளடங்கும்.' என்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அருளாசியைத் தாண்டியும் ஓர் அரசியல்பணி உண்டு

உலகில் உள்ள 1.2 பில்லியன் கத்தோலிக்கர்களின் தலைவரான பாப்பரசர் முதலாவது ஆசீர்வாதப்பர் அடுத்த ஆண்டு தமிழர் திருநாளில் தமிழர் தாயகத்துக்கு முதல் தடவையாக வருகை தரவுள்ளார் என்ற நற்செய்தி கிடைத்திருக்கிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற தமிழர்களின் நம்பிக்கைக்கு மகுடம் வைப்பது போன்று பாப்பரசரின் வருகை அமைந்திருப்பதும் கூடுதல் சிறப்பு.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்று கொழும்பு அரசுகளும் புத்த பிக்குகளும் பறைசாற்றிக் கொண்டாலும் பாப்பரசர்கள் இங்கு வருகை தருவது புதிய விடயம் அல்ல. இதற்கு முன்னர் கடைசியாக 1995ஆம் ஆண்டில் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வருகை தந்திருந்தார். இன மோதல் உச்சத்தை எட்டியிருந்த நேரம் அது. எனவே வடக்குக்கு வருகை தருவதற்கான வாய்ப்புகள் அவருக்குக் கிட்டவில்லை. அதனால் தமிழர்களின் தாயகப் பகுதிக்கு வருகை தரும் முதலாவது பாப்பரசர் என்கிற சிறப்பு ஆசீர்வாதப்பருக்கே உரித்தாகிறது.

போர் முடிந்து, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட ஒரு சூழலில் பாப்பரசர் ஆசீர்வாதப்பரின் வடக்கு வருகை முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருக்கிறது. அதிலும் குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சந்தித்து பாப்பரசர் ஆறுதல் கூறுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உலக மக்கள் தொகையில் அதிகூடியோரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மதத் தலைவர் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆற்றுப்படுத்துவது சக்தி மிக்க அருளாசியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. துன்பங்களால் துவண்டு, ஒடுங்கிப் போயிருக்கும் மக்கள் கூட்டத்தினருக்கு அது மீட்சியையும் புத்தெழுச்சியையும் கொடுக்கும் என்பதும் திண்ணமே! ஆனால், அருளாசி வழங்குவதுடன் மட்டுமே பாப்பரசரின் பங்கு பணி இதுவிடயத்தில் நிறைவடைந்து விட்டது என்று வத்திக்கான் எண்ணிவிடலாகாது.

இலங்கைக்கான இந்தப் பயணத்தின்போது கொழும்பு அரசின் உயர் தலைவர்களைப் பாப்பரசர் நிச்சயம் சந்தித்துப் பேசுவார். அப்போது நிரந்தர அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கான முழு அழுத்தத்தையும் அவர் கொழும்பு அரசின் தலைவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதை வத்திக்கான் கவனத்தில்கொள்ள வேண்டும்.

பாப்பரசரின் பணி இந்த உலகில் துன்பங்கொள்ளும் மக்களுக்கு ஆன்ம விடுதலை அளிப்பது மட்டுமன்று. வாழும் காலத்திலேயே கடவுளின் குழந்தைகள் நிம்மதியாகவும் கௌரவத்துடனும் வாழ்வதை உறுதி செய்வதும் நீதியாகவும் நியாயமாகவும் நடத்தப்படுவதை உறுதி செய்வதும்கூட பாப்பரசரின் பணிகளில் ஒன்றே.

அதிலும் 30 ஆண்டுகளாகத் கடும் துன்பங்களில் சிக்கி உழன்ற கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய தமிழ் மக்களுக்கு நிம்மதியானதும் அமைதியானதுமான வாழ்வு ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதையும் பாப்பரசரின் பயணத்தின் முக்கிய குறிக்கோளாக வத்திக்கான் செயற்படுத்த வேண்டும் என்பது தமிழ் மக்களின் வேணவா.

பாப்பரசர் போன்ற உலக ஆன்மிகத் தலைவர்களின் சக்தி அபரிமிதமானது. அதில் கொஞ்சத்தை அவர் தமிழர்களின் நிம்மதியான வாழ்வுக்காவும் செலவிட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

# ஆட்சி அதிகாரம் எவரது கைகளில் உள்ளது

■ கந்தவனம் கோணேஸ்வரன்

இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி இருக்கிறார். நாடாளுமன்றம் இருக்கிறது. அடுத்தமட்டத்தில் மாகாணசபைகளும் இருக்கின்றன. உள்ளூராட்சி சபைகள்கூட இயங்குகின்றன. ஆனால், ஆட்சி அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பது விடை காணவேண்டிய பிரதான கேள்வியாகிப் போய்விட்டது.

வடபகுதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சரும் மாகாணசபை உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஆனால், ஆட்சி அதிகாரம் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு இராணுவ அதிகாரிகள்தான் ஆட்சியாளர்கள்போல் நடந்துகொள்கிறார்கள். தென்னிலங்கையிலும் மாகாண சபைகள் இயங்குகின்றன. பொலிஸாரும் அதிகாரம் மிக்கவர்களாக இருக் கிறார்கள். ஆனால், இவர்களையும் மீறிக் கொண்டு புத்தபிக்குகள் சிலரே அங்கு ஆட்சிபுரிபவர்கள்போல் நடந்துகொள்கிறார்கள்.

அண்மைக்காலமாக இலங்கையில் எங்கே எந்தக் குழப்பம் நடந்தாலும் அதில் புத்தபிக்குகளின் பங்கு இல்லாமல் இருப்பதில்லை. கீழைத்தேய கலாசார வழிவந்தவர்கள் நாம். சமய குருக்கள் எங்கள் சமூக அமைப்பில் உயர்ந்த இடம் வகிக்கிறார்கள். அந்த இடத்துக்கேற்றாற்போல் அவர்களது நடவடிக்கைகளும் அமையவேண்டுமென பொது மக்கள் எதிர்பார்ப்பது நியாயமானது.

அளுத்கம, பேருவளை சம்பவங்களில் கூட காவியுடை தரித்தவர்கள் தொடர்புபட்டுள்ளார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால், அவர்கள் மீதோ அல்லது கலவரத்தைத் தூண்டுவதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள் மீதோ அரசு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக, வதந்தி பரப்புவோரையும், பிரச்சினைகளை மீளத் தூண்டுபவர்களையும் கைதுசெய்வோம் என்றுதான் அறிவித்திருக்கிறது. பிரச்சினைகளின் மூலவேர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றன.

பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் பல பகிரங்கமாகவே உடைக்கப்பட்ட போதிலும், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் அமைச்சர்கள் சிலர், அரச தலைவருடன் இதுதொடர்பாகக் கலந்துரையாடுகின்றோம். விரைவில் நீதி பெற்றுத் தருவோம் என்றெல்லாம் அறிக்கைகள் விட்ட பின்னர்கூட எங்கே பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன? அப்படியேதும் நடக்கவில்லையே என அரசு கூறுமளவுக்கு நாட்டில் நியாயம் பலவீனப்பட்டுப்போய் இருக்கிறது.

இலங்கையில் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுவரும் சிறுமிகள் வல்லுறவில் படைத்தரப்புச் சிப்பாய்கள் சம்பந்தப்படுவது சாதாரணமாகக் காணப்படுகிறது. மாத்தறையாக இருந்தாலென்ன, மாவிட்டபுரமாக இருந்தாலென்ன நிலைமை கவலைக்குரியதாகவே இருக்கிறது. பாலியல் வல்லுறவு என்பது ஒரு கடைகெட்ட ஈனச்செயல். அதிலும் குழந்தைகளை வல்லுறவுப்படுத்துவது என்பது விலங்குகள்கூட செய்ய முன்வராத கேவலமான நடவடிக்கை. ஆனால், அது இலங்கையில் நடக்கிறது. அதற்காக நாமும் வெட்கப்படுவதாக இல்லை. சட்டப்படி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனதானே என்று இலகுவாகச் சொல்லிவிடுமளவுக்குச் சமுதாய ஒழுக்கநெறி சீர்கெட்டுக் கிடக்கிறது.

பிள்ளைகளின் நல்வாழ்வுக்குக் காவலர்களாகச் செயற்படவேண்டியவர்கள் ஆசிரியர்கள். சமுதாயத்தின் நல்வாழ்வுக்குக் காவலர்களாக இருக்கவேண்டியவர்கள் மதகுருமார்கள். நாட்டுமக்களின் நல்வாழ்வுக்குக் காவலராக இருக்கவேண்டியவர்கள் படைத்துறையினர். இம்மூன்று தரத்தாரும் மற்றைய துறைசார்ந்தவர்களைக் காட்டிலும் ஒழுக்கநெறிகளில் மேம்பாடுடையவர்களாக இருக்கவேண்டியவர்கள் என மக்கள் எதிர்பார்ப்பதில் தவறேதும் இல்லை. இம்மூன்று சாராரும் தத்தம் பதவிகளின் கௌரவத்தைப் பேணுவதற்காகப் பயிற்சிகள்மூலம் நெறிப்படுத்தப்படுகிறார்கள். ஆனால், இலங்கையில் நடப்பது என்ன?

அண்மைக்காலமாக இலங்கையில் எங்கே எந்தக் குழப்பம் நடந்தாலும் அதில் புத்தபிக்குகளின் பங்கு இல்லாமல் இருப்பதில்லை. கீழைத்தேய கலாசார வழிவந்தவர்கள் நாம். சமய குருக்கள் எங்கள் சமூக அமைப்பில் உயர்ந்த இடம் வகிக்கிறார்கள்.

கடந்தவாரம் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூவ இணையதளத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் தொடர்புபடுத்திய செய்தியொன்று வெளியாகிச் சிலமணி நேரத்துக்குள்ளாகவே அச்செய்தியை அகற்றவேண்டி நேர்ந்தது மாத்திரமல்ல, இலங்கை நாடே இந்தியாவிடம் மன்னிப்புக் கேட்கவேண்டியதுமா யிற்று. இலங்கை அரசு இந்திய அரசிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்பதென்பது இலங்கை மக்கள் அனைவரும் இந்திய மக்கள் அனைவரிடத்திலும் மன்னிப்புக் கேட்பதற்கு ஒப்பானது. நினைத்தாலே கூசுகின்ற இந்தக் காரியத்துக்குப் பாதுகாப்புத்துறையே வழியேற்படுத்தியிருப்பது மோசமான அபத்தம்.

இதற்காக அரசாலும் பாதுகாப்புத் தரப்பாலும் கூறப்படும் சமாதானங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல. உத்தியோகபூர்வம் அல்லாததாகவோ, தவறுதலாகவோ ஒரு செய்தி பாதுகாப்பு இணையதளத்தில் இடம்பெறுவதென்பது நடைபெறக்கூடாதவொன்று. அவ்வாறு நடைபெறுவது உண்மையானால், பாதுகாப்புத் தரப்பினரின் ஏற்பாடுகளில் பலவீனம் இருக்கிறது என்பதுதான் பொருள். படித்த அதிகாரிகளைக்கொண்டு இயக்கப்படும் இணையதளத்தில் தவறுகள் நேர்கின்றன என்பது கற்பனைக்குக்கூட பொருந்தாது. ஆனால், இலங்கைப் பாதுகாப்புத் துறையின் இணையதளத்தில் அவ்வாறான தவறு நடந்திருப்பதாக அரசு கூறுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இலங்கை அரசுக்கு இருக்கும் மரியாதையைப் பற்றி கேட்கவேணடியதில்லை. இலங்கை அமைச்சர்கள் எவ்ரையும் தமிழகத்தில் கால்வைக்க விடுவதில்லை என்பதில் தமிழக மக்கள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து உறுதியாக இருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களைக் கிள்ளுக்கீரைகளாகவும் இந்தியத் தமிழர்களை வெற்றுவேட்டுகளாகவும் எண்ணி இலங்கை அரசு நடந்துகொண்டதன் விளைவு இது. இரண்டு கோடி மக்களைக்கொண்ட தனது அரசை பாரிய சாம்ராஜ்ஜியம் போலவும் ஏழு கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாட்டு அரசை ஒரு சிற்றரசு போலவும் கற்பனைப் பண்ணிக் கருத்துகளை வெளியிட்டதன் பலன் இது.

இது ஒருபுறமிருக்க, புத்தபிக்குகளின் அடாவடியொன்று சர்வதேச மட்டத்தை எட்டுமளவுக்கு கடந்த திங்களன்று இடம்பெற்றிருப்பது இலங்கைக்கு மற்றுமொரு தலையிடி எனலாம். கொழும்பில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற காணாமற் போனோர் குடும்பங்களுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலின்போதே புத்தபிக்கு கள் உள்நுழைந்து குழப்பத்தை ஏற் படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கலந்து ரையாடலில் பிரசன்னமாகவிருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது உயிருக்கே அஞ்சிநிற்கும் அளவுக்கு அடாவடித்தனங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த காணாமற்போனோர் தொடர்பான முப்பது குடும்பங்களையும் நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்கள் என்ற கருத் துப்பட புத்தபிக்குகள் கூச்சலிட்டிருக்கி றார்கள். கூச்சலிடுபவர்களும் குழப்பம் விளைவுப்பவர்களும் புத்தபிக்குள் என்பதால் பொலிஸாரும் சற்றுப் பின்வாங்க வேண்டியவர்களானார்கள்.

புத்தபிக்குகள் கூறுவதுபோல உண்மையிலேயே இந்நிகழ்வு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலாக இருந்தால் அவர்கள் பொலிஸாரை அனுப்பி நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வேண்டும். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் இலங்கை அரசியல் சட்டப்படி பொலிஸாருக்கு மாத்திரமே இருக்கிறது.

புத்தபிக்குகள் அண்மைக்காலமாக ஒன்றுகூடல்களைத் தடாலடியாகக் குழப்புவதில் பயிற்சிபெற்றவர்கள்போல் நடந்துகொள்கிறார்கள். இது நாட்டுக்கு நல்விளைவைத் தரக்கூடியதல்ல. சமய குருமார் என்ற அந்தஸ்தைக் காட்டிலும் அவர்களின் பின்னால் அரசு நிற்கிறதோ என்று பொலிஸாரே அஞ்சுமளவுக்குச் சூழ்நிலை நாட்டில் காணப்படுவதால்தான் பிக்குகளின் அடாவடிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. பொதுபல சேனா போன்ற அமைப்புகளின் தொடக்கச் செயற்பாடுகளின்போதே அரசு அவர்கள்மேல் சரியான சட்டநடவடிக்கை எடுத்திருந்தால் அல்லது அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் பொலிஸாருக்குத் தடைபோடாதிருந்தால் இன்று புத்தசாமிமார்கள் ஏனைய மதத் தலைவர்கள்போல பண்பாடு மிக்கவர்களாகவே உலக நாடுகளுக்குக் காட்சியளித்திருப்பர்.

ஆனால், நிலைமை தொடர்ந்தும் கவலைக்கிடமாகவே இருக்கிறது. புத்தபிக்குகளின் அடாவடிகளுக்கு நாங்களும் சாட்சி என்று அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்லாந்து போன்ற வலிமைமிக்க நாடுகளும் அணிதிரண்டு சாட்சிசொல்லும் அளவுக்கு மோசமாகியிருக்கிறது.

அந்த நாடுகள் தமிழர்களுக்கு ஆதரவு வழங்குகின்றன. அதனால் அவர்கள் அப்படித்தான் நடந்துகொள்வார்கள் என அரசு கருத்துக் கூறிக்கொண்டிருப்பது நாகரிகத்தின் பாற்பட்டதோ, இராஜதந்திரத்தின் பாற்பட்டதோ அல்ல. அதுவுமல்லாமல் இன்று இலங்கை உலக நாடுகளின் மத்தியில் சிக்குண்டிருக்கும் நிலையோடு ஒப்பிடுகையில் இவ்வுத்திகள் உகந்தனவுமல்ல.

இலங்கை அரசு தன்னை ஒரு முழுமையான அரசாகவே நிலைநிறுத்தி உள்நாட்டிலேயே சில உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரமிது. தமிழர்களைக் கட்டுப்படுத்துவதனாலோ அல்லது பயமுறுத்துவதனாலோ பிரச்சினைகள் மறைந்து போகலாம் என்பது அபத்தமான கற்பனை. அரசு விழிப்புடன் செயற்படத் தவறினால் விளைவுகள் மோசமானதாக அமையலாம்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 180

# அரிசிச் சோறு, கோதுமை மாவினாலான உணவுகளைக் குறைவாக உண்போம்



"மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்றாராம் பொய்யா மொழிப் புலவர் வள்ளுவர். அவ்வாறே நாம் உண்ணும் உணவு, உணவுத் தெரிவு, உணவின் அளவு, என்பவற்றின் அடிப்படையே நோயைத் தீர்ப்பது மட்டுமன்றி, நோய் ஏற்பட அடிப்படை ஏதுக்களும் ஆகின்றன.

இலங்கையர்களான எமது பிரதான உணவு அரிசிச்சோறே ஆகும். இதனாலேயோ என்னமோ, நாம் எமது உணவுத் தட்டைச் சோற்றினால் நிரப்பி உண்ணவே பழக்கப்பட்டுள்ளோம். மேலும் நாம் 'மாப்பொருளுக்கு அடிமையாதல்' என்ற வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எமது தனித்துவமான பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களிலிருந்து விலகி, மேலைத்தேய மோகத்தினால் மேற்கத்தேய உணவு வகைகளை உண்ண அதிக நாட்டமும் கொண்டுள்ளோம். எத்தனையோ விதமான சத்தான தானியங்கள் எமது பூமியில் விளைகின்ற போதிலும், அரிசி மற்றும் கோதுமை ஆகிய இரண்டே இரண்டு தானியங்களை மட்டுமே எமது உணவுக்கு எடுத்துக் கொள்கிறோம்.

ஆயினும், போசாக்கு விஞ்ஞானம் கூறும் சில உண்மைகளைப் பார்ப்போமாயின், நெல் விதையின் வெளிக் கவசத்திலே விற்றமின் B12, புரதம், நார்ப்பொருள் அடங்கியுள்ளன. எனினும் உமியை அகற்றும்போது, நன்கு தீட்டும்போது நீக்கப்படும் உமியுடன் இவையும் அற்றுப் போகின்றன. எனவே, நன்கு தீட்டப்பட்ட, தவிடு நீக்கப்பட்ட அரிசி உண்ணப் பொருத்தமானது அன்று. எனவே, வெள்ளை நிற அரிசியாயினும், சிவப்பு நிற அரிசியாயினும் தவிடு நீக்கப்படாத அரிசியே உண்பதற்கு உகந்தது. ஆயினும் பச்சை அரிசி, அவித்து குற்றிய சம்பா, குத்தரிசி (புழுங்கலரிசி) போன்றவை அதிகளவு போசணைப் பெறுமதி கொண்டவை. அவிக்கும் போது வெளிப்புற தவிட்டுப் படையிலுள்ள விற்றமின் B12, புரதம், நார்ப்பொருள்கள் அரிசியின் மையத்தை நோக்கி அசைகின்றன. எனவே இவற்றின் போசாக்குப் பெறுமதி அதிகம் என்பதுடன், சமிபாடடையவும் அதிக அளவு நேரம் எடுப்பதனால், குருதியில் குளுக்கோஸின் அளவை விரைவாகவும், கூர்மையாகவும், அதிகரிக்கச் செய்வதும் இல்லை. எனவே நீரிழிவு நோயாளிகள் மற்றும் உடல் பருமனானவர்கள் இவை உண்பதற்கும் சாலச் சிறந்தது.

**மாப்பொருளின் அளவைத் தீர்மானித்தல்**

*"அற்றால் அளவறிந்து உண்க; அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்குமாறு"*

**- திருக்குறள் 943**

"முன்னுண்ட உணவு சமிபாடடைந்த பின்னர் மறுமுறை உண்பதுடன், அதை அளவாக உண்ண வேண்டும். அதுவே பெறுவதற்கு அரியதான இந்த மானிட வாழ்க்கையை நெடுங்காலத்துக்கு காப்பாற்றும் வழி"

**- புலி கேசிகன் உரை**

நாம் நோயற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு நாம் உண்ணும் மாப்பொருளின் அளவு பெரிதும் உதவி செய்யும். ஒவ்வொரு நாளும் மொத்த உணவிலிருந்து கிடைக்க வேண்டிய சக்திப் பெறுமதியின் 55 வீதத்திலிருந்து 65 வீதம் வரைக்கும் மாப்பொருள் உணவிலிருந்து பெறலாம். ஆயினும் நாம் உண்ணும் சகல உணவுப் பொருள்களிலும் அடங்கியுள்ள காபோவைதரேற்றின் அளவு வேறுபட்டாலும், பெரும்பாலும் எல்லாவற்றிலும் காபோவைதரேற்று அடங்கியுள்ளது. உதாரணமாக; அரிசிச் சோறு, சோளம் முதலிய தானியங்கள், பாண், ரொட்டி, பிட்டு முதலிய உணவுகளில் அதிகளவிலும், கீரை வகைகள், மரக்கறிகள், பழங்களில் குறைந்தளவிலும் காணப்படுகின்றது. விரிவாகக் கூறுவதானால், 100 கிராம் உருளைக்கிழங்கில் 23 கிராம் காபோவைதரேற்று காணப்படுகையில், 100 கிராம் பாசிப்பயறில் 57கிராம் காபோவைதரேற்று காணப்படுகிறது. எனவே பயறு, கடலை, கௌப்பி என நாம் உள்ளெடுக்கும் தானிய வகைகள், பருப்பு வகைகளில், கிழங்கு வகைகளிலும் பார்க்க காபோவைதரேற்றின் அளவு அதிகம் என்ற உண்மையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியதாயுள்ளது. எனவே நீரிழிவு நோயாளிகள் பயறுதானே, கௌப்பிதானே என்று நினைத்து அதிகளவு இவற்றை உண்ணுதல் நன்றன்று. எனவே பொதுவாக பிரதான உணவுகளான சோறு, பிட்டு போன்ற மாப்பொருள் மிக அதிகளவில் அடங்கிய உணவுகளை நாம் குறைத்து உண்ணுதல் மிக மிகச் சிறப்பாகும்.

மேலும் நாம் உண்ணும் மாப்பொருளின் அளவைப் பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கலாம்.

- ♦ வயது மற்றும் உடல் உயரத்துக்குரிய உடல் நிறை
- ♦ நோய்
- ♦ நோயின் தீவிரத் தன்மை
- ♦ உடலுழைப்பின் அளவு
- ♦ வாழ்கின்ற நாடு

மேலும் உடல் உயரத்துக்கு பேண வேண்டிய நிறையிலும் அதிக நிறை உள்ளவர்கள் மற்றும் அதீத கொழுப்பு உள்ளவர்கள், நீரிழிவு நோயுள்ளவர்கள் மிகக் குறைந்த அளவு பிரதான உணவுகளை உண்ணுதல் நன்று.

ஆனால் சிறார்கள், வளரும் பிள்ளைகள், அதிகளவு உடல் உழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள், விளையாட்டு வீரர்கள், குளிர்ப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் ஆகியோருக்கு இந்த விதிமுறை பொருந்தாது. இவ்வாறானவர்கள் அதிகளவு மாப்பொருள் அடங்கிய உணவுகளை உள்ளெடுத்தல் வேண்டும்.

**எவ்வாறு சோற்றுடனான பிரதான உணவைப் பூரணமான உணவாக மாற்றலாம்?**

எமது உணவுத் தட்டில் அரைப் பங்கானது, சோறு/பிட்டு முதலிய பிரதான உணவாகவும், ஆகக் குறைந்தது அரைப்பங்காவது பழங்கள் மற்றும் மரக்கறிகள் மற்றும் புரதம் அதிகமுள்ள தானியங்கள், பருப்பு வகைகளாகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் ஒவ்வொரு நாளும் கீரை வகை உள்ளடங்கலாக 2-3 விதமான மரக்கறிகளும் 1-2 வகையான பழங்களுமாக ஆகக் குறைந்தது ஐந்து வகை பழங்களும் மரக்கறிகளும் உள்ளெடுத்தல் வேண்டும். ஆயினும் நாம் துரதிர்ஷ்டவசமாக எமது உணவுக் கோப்பையைப் பிரதான உணவுகளான சோறு/பிட்டு முதலியவற்றால் நிரப்பி, மிகச் சொற்ப மரக்கறிகளுடனேயே உண்கின்றோம்.

**கோதுமை மா / கோதுமை மாவால் தயாரிக்கப்பட்ட உணவுகள்**

கோதுமைத் தானியத்திலும் வெளிப்புறப் படையிலேயே அதிகளவு விற்றமின்கள், புரதம், நார்ப்பொருள்கள் அடங்கியுள்ளன. மேலும் உட்புறத்தில் அதிகளவு மாப்பொருளே அடங்கியுள்ளது. ஆனால் இலங்கையில் மிக மிக அதிகளவு வெளிப்புறப்படை அகற்றப்பட்டு, மாப்பொருள் அதிகளவு அடங்கியுள்ள, போசணைப் பெறுமதி குறைந்த கோதுமை மாவே தயாரிக்கப்படுகின்றது. ஆனால் ஆட்டாமா முதலிய குறைந்தளவு வெளிப்புறப் படை அகற்றப்பட்ட கோதுமை மா, சாதாரணமாக கிடைக்கும் கோதுமை மாவிலும் பார்க்க போசணைப் பெறுமதி கூடியது. எனவே இயலுமான அளவு கோதுமை மா பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுகளை குறைத்தல் நன்று.

**எவ்வாறு கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுகளின் போசணைப் பெறுமதியைக் கூட்டலாம்?**

தனிக்கோதுமை மாவால் தயாரிக்கப்படும் உணவுகளை விட, ஆட்டாமா, குரக்கன்மா, அரிசிமா சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் சிறந்தவை. மேலும் போசாக்குச் செறிவூட்ட, பழங்கள் மற்றும் மரக்கறிகளை உணவுடன் சேர்க்கலாம். இவற்றைத் தவிர, தனிக்கோதுமையினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இரத்தத்தில் சீனியின் அளவைக் கூர்மையாகவும், விரைவாகவும் அதிகரிப்பதனால் நீரிழிவு நோயாளிகள் ஆட்டாமா, குரக்கன்மா, அரிசிமா உள்ளடங்கிய உணவுகளை உள்ளெடுத்தலே நன்று. நீரிழிவு நோயாளிகளுக்கு மட்டுமன்றி சிறார்கள், கர்ப்பிணிகள், வளரிளம் பருவத்தவர்கள், வயது முதிர்ந்தோர் முதலியோருக்கும் போசாக்குப் பெறுமதி குறைந்த தனிக்கோதுமை மாவிலான உணவிலும் பார்க்கச் சத்தான அரிசிமா, குரக்கன்மா, ஆட்டாமா உணவுகளை உண்ணுதலே சாலச்சிறந்தது ஆகும்.

*போசாக்கியலாளர் தாரணி முரளிஹரன்,*
**(Mphil -Reading (Food & Nutrition))**
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஆவணி-02 திங்கட்கிழமை 18.08.2014
திதி: அட்டமி மு.ப.11.26 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.05.26 வரை
சுபநேரம்: 12.05 - 01.35 வரை
இராகுகாலம்: 07.35-09.05 வரை
ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி

**மேடம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்கு வாதம் ஏற்படும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாளுங்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து போகும்.

**இடபம்**: குடும்பத்தில் அமைதி நிலவும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். பெண்களுக்கு திருமணப்பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் தரும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்**: நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்**: மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்**:உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உங்களைப்பற்றி தவறாகச் சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கன்னி**: கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**துலாம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் விரும்புவர். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்**: தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. வீடு, வாகனச் செலவுகள் குறையும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**தனுசு**:செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.

**மகரம்**: வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**கும்பம்**: தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். உத்தியோகத்தில் திறமை களை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் உண்டாகும்.

**மீனம்**: சில வேலைகளை உங்கள் நேரடிப் பார்வையிலேயே முடிப்பது நல்லது. எவரையும் நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். சாதாரணமாகப் பேசுவதைக் கூட சிலர் குதர்க்கமாக புரிந்து கொள்வார்கள்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | 7 | | | 8 | 3 |
| | | | 2 | | 8 | 4 | | |
| | 9 | | 1 | 5 | | | | 6 |
| | | | 5 | | | 8 | | 7 |
| 3 | | 8 | 4 | 2 | 7 | 5 | | 1 |
| 1 | | 7 | | | 3 | | | |
| 6 | | | | 4 | 5 | | 1 | |
| | | 9 | 7 | | 1 | | | |
| 5 | 8 | | | 6 | | 9 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 2 | 6 | 5 | 1 | 7 | 9 | 4 |
| 1 | 5 | 7 | 9 | 3 | 4 | 6 | 2 | 8 |
| 9 | 4 | 6 | 7 | 2 | 8 | 1 | 3 | 5 |
| 4 | 8 | 1 | 3 | 6 | 2 | 5 | 7 | 9 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 5 | 4 | 8 | 3 |
| 3 | 7 | 5 | 8 | 4 | 9 | 2 | 6 | 1 |
| 5 | 9 | 4 | 2 | 8 | 6 | 3 | 1 | 7 |
| 6 | 1 | 3 | 5 | 9 | 7 | 8 | 4 | 2 |
| 7 | 2 | 8 | 4 | 1 | 3 | 9 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# நல்லை ஆதீனத்தில் இன்று 48ஆவது பீடாரோஹண விழா



இலங்கை மணித் திருநாட்டின் வடபாலமைந்துள்ள யாழ்ப்பாணத்து நல்லூரிலே அமைந்திருக்கும் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று 48ஆவது பீடாரோஹண விழா இடம்பெறுகிறது. சைவத் தையும் தமிழையும் தமது இரு கண்களாகப் போற்றி வளர்த்தவரான முதலாவது ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் 1966இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆதீனம், இப்போது பல்துறைகளிலும் வளர்ச்சி பெற்று அழகிய நவீன அமைப்புடன் திகழ்கின்றது.

இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமாகும் இந்த விழா முதலில் மங்கல இசை முழங்க குருமூர்த்த ஆலய விசேட பூசையுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேகங்களும், ஆராதனைகளும், விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

இன்றைய பீடாரோஹண விழாவில் கொலுப் பூசையின் பின்பு அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கப்படும். தொடர்ந்து வேதபாராயணமும், திருமுறைப் பாராணமும் இடம்பெற்று முடிந்த பின்னர் பட்டணப் பிரவேசம் நிகழும்.

சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்க்கின்ற இன்றைய இரண்டாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளுக்குப் பீடாரோஹணமும், விசேட பூசையும், தீபாராதனையும் இடம்பெறும். பின்பு நல்லூர் ஆலய வீதி வழியாக சுவாமிகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார். அப்போது பூரண கும்பம், குத்து விளக்கு வைத்து பூமாலை அணிவித்துப் பாத பூசை இடம்பெறும்.

இன்று ஆவணி முதலாம் நாள் கார்த்திகைப் பெருநாளாகும். இன்றைய தினம் முருகப் பெருமான் பூச்சப்பரத்தில் காட்சி தருவார். அத்தகைய சிறப்புமிக்க கார்த்திகை நட்சத்திர நாளிலே ஆதீனத்தில் நடைபெறுகின்ற பீடாரோஹண விழா மிகச் சிறப்புடையது.

பிரசங்கம் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்த சுவாமிகளின் நல்லெண்ணத்திலே உருவான இந்த ஆதீனம் நமது சைவ மக்களுக்கே பெருமையளிக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகிறது. இன்று குருமஹா சந்நிதானமாக விளங்குகின்ற சுவாமிகளும் எங்கெல்லாம் சைவ விழாக்கள், மஹா கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று அருளாசியுரைகளை வழங்கி வருகின்றார்.

அவருடைய இந்த அளப்பரிய சேவையால் சைவசமயம் நன்கு மேலோங்கி வருகிறது எனலாம். இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பண்ணிசையும் புராணபடனமும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

மேலும், சங்கீத இசை வகுப்புக்கள், பாலர் வகுப்புக்கள், மிருதங்க வயலின் வகுப்புகள் என்பனவும் நடைபெற்று வருகின்றன. இன்றைய பீடாரோஹண விழாவுக்கு வருகை தரும் அடியவர்களுக்கு மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானமும் வழங்கப்படவுள்ளதால் அனைத்து அன்பர்களும் பீடாரோஹண விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ஆதலால்- சைவ அன்பர்களும் அபிமானிகளும் ஒருசேர வந்து ஒற்றுமையாக இந்த ஆதீனத்தின் சேவைகளுக்கு உறுதுணை புரியுமாறு வேண்டப்படுகின்றனர்.

*கலாபூஷணம்*
*இராலைசயா ஸ்ரீதரன்*


இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை
ட்ரய்வ் க்றீன் மூலம் மேற்கொண்டு
தேவையற்ற முறையில் எரிபொருளுக்காக
செலவழிக்கின்ற பெருமளவு பணத்தினை மீதப்படுத்திக் கொள்ளுங்கள்

இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை ட்ரய்வ் கிறீன் மூலம் செய்து எரிபொருள் செயல்திறன் பற்றி அறிந்து கொள்ளுங்கள். பணத்தினை சேமிக்க ஆரம்பியுங்கள்.
வாகனத்தின் எரிபொருள் செயல்திறன் பற்றிய தரவுகளை ட்ரய்வ் கிறீன் புகை பரிசோதனையொன்றின் மூலமே உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.
நீங்களும் இன்றே ட்ரய்வ் கிறீன் இற்கு சென்று உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை மேற்கொண்டு அதன் மூலம் பெறுகின்ற தரவுகளை பயன்படுத்தி உங்கள் வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை முறைப்படி செய்து எரிபொருள் செயல்திறனை அதிகரித்துக் கொள்ளுங்கள்.
பண விரையத்தினை குறைத்துக் கொள்ளுங்கள்

**இத்தரவுகள் ட்ரய்வ் கிறீன் இடமிருந்து இலவசம்**

எரிபொருள் விரயம் பற்றிய தரவுகள்

பராமரிப்புக்கான எளிய வழிகாட்டல்கள்




நாடு முழுவதும் உள்ள ட்ரய்வ் க்றீன் கிளைகளுக்கு சமுகமளியுங்கள். அல்லது உங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள ட்ரய்வ் க்றீன் நிலையத்தின் தகவல்களை பெற தொடர்புகொள்ளுங்கள்.

**உடனடி அழைப்புக்கு: 0117 444 444**

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. பெற்றோல் வாகனங்களுக்காக மட்டுமே.

## 'குடும்பம் எனும் வடிவில்' தேவாலயங்களில் வீதி நாடகம்

யாழ்.மாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குடும்ப ஆண்டை யொட்டி "குடும்பம் எனும் வடிவில்" என்ற வீதி நாடகம் யாழ்.மறைமாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

'குடும்பமும் மனித மாண்பும்' என்னும் தொனிப் பொருளில் குடும்பங்களின் இன்றையநிலை, போருக்குப் பின்னர் குடும்பங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி இடம்பெறும் இந்த நாடக ஆற்றுகையை விண்ணப் பிக்கும் ஆலயங் களில் நடத்தத்தயாராக இருப்பதாகக் கத்தோலிக்க இளை யோர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (வ-135)

UNION
ASSA ABLOY

அசல் மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய உயர் தரம் வாய்ந்த கதவு தாளிகள் (Lock)




பிரித்தானியாவின் அஸ்ஸா அப்லொய் (www.assaabloy.co.uk) லிமிடெட்டிலிருந்து **அசல்** யூனியன் வர்த்தக நாம கட்டுமான பொருட்களை இலங்கையில் **இறக்குமதி செய்யும் ஏக அங்கீகாரம் பெற்றவர்கள்**

அசல் பொருள் சான்றளிப்பு

**ஹொட்லைன்: ஸ்ரீ மனோஹரன் 0777 270 432**

R.P.L
RANIYO (PVT) LTD

**RANIYO (PVT) LTD.**
NO 385/2, Old Kotte Road, Rajagiriya, Sri Lanka.
Tel : +94 112 867220 - 3 Fax : +94 112 867220 Email: raniyo@sltnet.lk
Web: www.raniyo.com




**சகல**

**HYBRID**

**வாகனங்களுக்கும் அதிசிறந்த குத்தகை வசதி**

அல்ஃபலாஹ் வழங்கும் விசேட இஜாரா குத்தகை சேவை

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

0115 500 786

الفلاح
AL-FALAAH
ISLAMIC FINANCIAL SERVICES

C/15762

## நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு




தென்மராட்சி, ஓக.17

கொடிகாமம் கிராமிய ஆயுள்வேத மத்திய மருந்தகத்தினர்" கடந்த புதன்கிழமை தென்மராட்சி கல்வி வலய உத்தியோகத்தர்களுக்கான "நீரிழிவு நோய்" தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தினர். கருத்தரங்கு நிறைவில் மரக்கறி சூப் தயாரிக்கும் முறைகள் பற்றிய செய்முறை விளக்கமும் காண்பித்து பங்குபற்றிய அனைவருக்கும் மரக்கறி சூப் விநியோகிக்கப்பட்டது.

கொடிகாமம் கிராமிய ஆயுள்வேத மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி திருமதி அனந்தஜோதி விஜயகுமார், வரணி ஆயுள்வேத மருந்தகப் பொறுப்பதிகாரி திருமதி உமாராணி விக்னேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (வ-9)




## பங்கீட்டு அடிப்படையில் விவசாயிகளுக்கு திருநெல்வேலி 'சிவப்பு' வெங்காயம்



அச்சுவேலி, ஓக.17

"யாழ்.விவசாய ஆராய்ச்சி பிரிவால்" யாழ்ப்பாணம் சின்ன வெங்காயத்தில் கலப்பு இன பிறப்பாக்கம் செய்யப்பட்ட "திருநெல்வேலி சிவப்பு" சின்ன வெங்காயம் இந்த வருடம் காலபோக வெங்காய நடுகைக்கு பங்கீட்டு அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

முன்னோடி விவசாயிகளுக்கு இந்த வருடம் 5 ஆயிரம் கிலோ வரையில் வழங்கப்படவிருப்பதாகவும் அடுத்த வருடம் இந்தத் தொகை மடங்கு கணக்காக அதிகரிக்கப்படலாம்" என்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி பிரிவின் பொறுப்ப திகாரி தி.கருணைநாதன் தெரிவித்தார்.

பொறுப்பதிகாரி தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில்; திரு நெல்வேலி சிவப்பு சின்ன வெங்காயம் யாழ்.மாவட்ட கால நிலைக்கு ஏற்புடைய வகையில் யாழ். சின்ன வெங்காயத்துடன் கலப்பு இன பிறப்பாக்கம் செய் யப்பட்டது. நடுகை செய்யப்படும் ஒரு கிலோ வெங்காயத்துக்கு 16 கிலோ வரையில் விளைச்சல் தரக்கூடியது. நோய்த்தாக்கத்தை எதிர்கொண்டு வளரக்கூடியது.

திருநெல்வேலி சிவப்பு சின்ன வெங்காயம் இந்த வருடம் காலபோக வெங்காய நடுகைக்கு 5 ஆயிரம் கிலோ வரையில் விவசாயிகளுக்கு வழங்கலாம். இந்தத் தொகை அடுத்த வருடம் சிறுபோக பயிர்ச்செய்கைக்கு 10 ஆயிரம் கிலோவுக்கு குறையாத தொகையாக அதிகரிக்கலாம்.

திருநெல்வேலி சிவப்பு சின்ன வெங்காயம் முன்னோடி விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நியாய விலையில் வழங்கப்படும். அதிலிருந்து தங்களுக்குத் தேவையான அளவை விவசாயிகள் விருத்தி செய்து கொள்ளலாம்.

வெங்காய உற்பத்தியில் யாழ். மாவட்டத்துக்கு இருந்து வந்த தனித்துவம் வெளி மாவட்ட உற்பத்தியால் மாற்றமடையத் தொடங்கியுள்ளது. இந்த வகையில் யாழ்.மாவட்ட விவ சாயிகள் மரபுவழி பயிர்ச் செய்கை முறைகளைக் கைவிட்டு நவீன தொழில் நுட்ப உத்திகளையும் பயிர்ச் செய்கை முறைகளையும் கைக் கொள்ள முன்வரவேண்டும். இதன் மூலம் திட்டமிட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்வதோடு பொருளாதார இழப்புக் களையும் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார். (வ-11)



## விஸ்வமடுவில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாண மருத்துவ சங்க வைத்திய அதிகாரிகளின் ஆதரவுடன் வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனின் ஏற்பாட்டில் விஸ்வமடு பிரதேச மக்களுக் கான இலவச மருத்துவ முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. கொழும்பிலிருந்து வருகை தந்த வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் மருத்துவ முகாமில் பரிசோதனைகளை மேற்கொண்டார். இதில் 150 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெற்றனர்.

மருத்துவ முகாமொன்றின் சேவையைப் பெறுவதற்காக 10 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டி இருந்தது.

இந்த இலவச மருத்துவ முகாம் தமது பகுதியில் இடம்பெற்றது பெரும் பயன்மிக்கதாக இருந்தது என பிரதேச மக்கள் தெரிவித்தனர். (வ)





# சிங்கர் நல்லை வசந்தம்

"நல்லைக் கந்தன் நல்லருள் பெற்று நாம் எல்லையில் துன்பம் எளிதாய் போக்குவோம்"

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 ஓகஸ்ட் 19 | 2014 ஓகஸ்ட் 20 | 2014 ஓகஸ்ட் 20 | 2014 ஓகஸ்ட் 21 | 2014 ஓகஸ்ட் 21 |
| யாழ்ப்பாணம் | சங்கானை | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
| மு.ப 9.30 தொடக்கம் | மு.ப 9.30 தொடக்கம் | பி.ப 2.30 தொடக்கம் | மு.ப 9.30 தொடக்கம் | பி.ப 2.30 தொடக்கம் |

**வட்டியில்லா தவணைக் கட்டணத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்**

**பழைய பொருள்களுக்கு மாற்றுமுறை விலைக்கழிவு**

**3 வருடத்திற்கு நீடிக்கப்பட்ட உத்தரவாதம்**

**பெறுமதிமிக்க பரிசில்கள்**



எங்கள் பிள்ளைகளுக்கு
## சித்திரப் போட்டி

எங்கள் குழந்தைகளின் ஆக்கத்திறனையும் உற்சாகத்தையும் வெளிக்கொணரும் சித்திரப் போட்டியை உங்கள் அனைவரினதும் வேண்டுகோளின் பேரில் இம் முறையும் நடாத்தத் தீர்மானித்துள்ளோம்

இத் தினத்தில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் சிங்கர் ப்ளஸ் காட்சியறைக்கு வருகை தாருங்கள்



புதிய முறையில் - விரைவாக
## சுவையான உணவு தயாரிப்போம்

நேரத்தையும் சிரமத்தையும் மீதப்படுத்தும் நவீன இலகு உபகரணங்களின் உதவியுடன் வீட்டிலுள்ள அனைவருக்கும் சுவையான உணவு தயாரிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையில் விபரங்களை கேட்டறியுங்கள். வீட்டிலுள்ள அனைவருடனும் வருகை தந்து புதியனவற்றை கற்றுக் கொள்ளுங்கள்.



**சரியான முறையில் தையல் இயந்திரத்தைப் பாவிக்கவும் தையல் செயல்முறையை கற்றுக் கொள்வதற்கும்**

**உங்கள் தையல் இயந்திரத்தை இலவசமாக சேவை செய்து கொள்ளுங்கள்.**

புதிய தையல் முறை மற்றும் சரியான முறையில் தையல் இயந்திரத்தைப் பாவிக்கும் தகவல்களை அறிந்து கொள்ளுங்கள். நீங்களும் வருகை தாருங்கள்.

உங்கள் தையல் இயந்திரத்தை இலவசமாக சேவை செய்து கொள்ள அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறைக்கு வருகை தாருங்கள்



## குளிர்சாதனப் பெட்டி சேவை

சிங்கர் ப்ளஸ் காட்சியறையில் பதிவு செய்து கொள்வதன் மூலம் எமது நடமாடும் சேவை தொழில்நுட்பவியலாளர்கள் உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை இலவசமாக சேவை செய்து தருவார்கள். சிங்கர் ப்ளஸ் காட்சியறைக்கு விரைந்து உங்கள் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



## தண்ணீர் பம்பி சேவை

அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையில் உங்கள் விபரங்களைப் பதிவு செய்வதன் மூலம் உங்கள் வீட்டிற்கு வரவழைத்து இலவச சேவையைப் பெற்றிடுங்கள்.

உங்கள் தண்ணீர் பம்பியினதும் அதன் உதிரிப்பாகங்களினதும் நீண்ட காலப் பாவனையை உறுதி செய்து கொள்ளுங்கள்.



## மோட்டார் சைக்கிள் சேவை

உங்கள் மோட்டார் சைக்கிளில் அசல் உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்வதுடன் இலவச சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையை நாடுங்கள்.

இவ் இலவச சேவையைப் பெற்றிட குறிப்பிட்ட சேவை நிலையங்களுக்கு உங்கள் மோட்டார் சைக்கிளை கொண்டு வருதல் வேண்டும்.

**வீட்டிற்குத் தேவையான பெறுமதிமிக்க பொருள்களை கழிவுகளுடன் பெற்றிட – பரிசுகளை வென்றிட – நீங்களும் அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையை நாடுங்கள்**

| சுன்னாகம் | சங்கானை | சாவகச்சேரி | கிளிநொச்சி | பருத்தித்துறை | நெல்லியடி | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு | மானிப்பாய் | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0212240555 | 0212251100 | 0212270197 | 0212280199 | 0212263411 | 0212264937 | 0212225408 | 0212290180 | 0212255343 | 0776433888 |

நிபந்தனைகளுக்குட்பட்டது

(011) 5 400 400 http:// www.singersl.com www.facebook.com/singersl

சலுகைகள் செல்லுபடியாகும் காலம், 2014 ஓகஸ்ட் 31 வரை மட்டுமே

**SINGER Plus**

C/15446

# முதியோர் வார விழாக்களில் சமூக சேவை ஆர்வலர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.17

இந்த வருட சர்வதேச முதியோர் வார விழாக்களில் மாவட்டத்தில் உள்ள சமூக சேவை ஆர்வலர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை கைதடி சாந்தி நிலையத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சமூகத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் பல்வேறு வகைகளில் பங்களிப்பு வழங்கி வருபவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் சமூக சேவை ஆர்வலர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. வயது வேறுபாடின்றி வழங்கப்படவுள்ள இந்தக் கௌரவிப்பைப் பெற விரும்புவோர் தமது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், தாம் ஆற்றிய சமூகப் பணி ஆகிய விவரங்களைக் கொண்ட விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து, செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் "அத் தியட்சகர், சாந்தி நிலையம், அரச முதியோர் இல்லம், கைதடி" என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்தி சமூகக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தும் பங்குதாரர்களின் எல்லைகளை விரிவுபடுத்தி சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய திருவிழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பம்

**குடிதண்ணீர், சுகாதார, போக்குவரத்து வசதிகளுடன் பொலிஸ், இராணுவத் தரப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கான ஏற்பாடுகளை பூநகரி பிரதேச சபையும் பங்குத் தந்தையும் இணைந்து மேற்கொண்டு வருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள திருவிழாவில் கலந்து கொள்ள நாளை 18ஆம் திகதி முதல் பாஷையூர், குருநகர் மற்றும் மூன்றாம்பிட்டி, பூநகரிப் பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் ஆலயப் பகுதியில் வந்து தங்கவுள்ளதை அடுத்து பூநகரி பிர தேச சபை முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

குடி தண்ணீர், சுகாதார, போக்குவரத்து வசதிகளுடன் பொலிஸ், இராணுவத் தரப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருவிழா 20ஆம் திகதி புதன் கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நற்கருணை விழா 23 ஆம் திகதி மாலை 6 மணிக்கும், திருவிழாத் திருப்பலி 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கும் இடம்பெற்று, திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் ஆலயப் பகுதியில் வீண் களியாட்டங்கள், மது பாவனைகளைத் தவிர்த்து புனிதம் பேணுமாறு பங்குத் தந்தை அருட்திரு பா. பிறாயன் அடிகளார் கேட்டுள்ளார். (வ-135)

Mahindra Rise.

மஹிந்திரா சென்ச்சுரோ
களவெடுப்பது சாத்தியமற்றது

என்ட்டி தெ.ஃப்ட் எலாம் மற்றும் ரிமோட் திறப்பு அடங்கிய
இலங்கையின் ஒரே மோட்டார் சைக்கிள்

Mahindra CENTURO
IT'S GREAT TO BE ME



மஹிந்திரா நம்பிக்கை மற்றும் சக்தியுடனான மஹிந்திரா சென்ச்சுரோ


எரிபொருள் சிக்கனமிக்க MCi-5 எஞ்சின்


என்ட்டி தெ.ஃப்ட் எலாம் மற்றும் ரிமோட் ஃப்லிப் திறப்பு


ஃபைலட் மீ முற்றும் கைட் மீ லைட்

இப்போது ரு. 169,598/- ±வெட்

www.mahindratwowheelers.com
Service Centre
விசேட லீசிங் வசதிகள்
85.4

2 வருட அல்லது 30,000 கி.மீ உத்தரவாதம்*

www.mahindracenturo.com http://www.facebook.com/mahindracenturo

வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பிலக்கம்
0772 880 555

அழையுங்கள்: காட்சியறை – கொழும்பு 06 077 281 4193
தெற்கு 077 002 3971 மத்திய மற்றும் வட மத்திய 077 002 3974
மேல் மாகாணம் 077 002 3973 வடக்கு மற்றும் வட கிழக்கு 077 002 3969

C 15767

ஐடியல் டு வீலர்ஸ் தனியார் நிறுவனம்
இல: 611, காலி வீதி, கொழும்பு 06.
தொலைபேசி: 0112 221 222
பெக்ஸ்: 0112 221 223
IDEAL 2 Wheelers

Guththila

காணி தேவை

பிரதான பாதை முகப்புடன் கூடிய குறைந்தது 35 பேர்ச் நிலம் கீழ்வரும் நகர எல்லைகளுக்குள் தேவை.

★ கிளிநொச்சி
★ முல்லைத்தீவு
★ சாவகச்சேரி
★ மன்னார்

எமது வாகன சேவை / பாகங்கள் தொடர்பான முன்னணி நிறுவனத்துக்கு 80 அடி பிரதான பாதை முகப்புடன் கூடிய கட்டடங்கள் அற்ற சமதரையான 35 பேர்ச் காணி தேவை. உரிமையாளர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 0766 367 147
(அலுவலக நேரங்களில் மாத்திரம் மு.ப. 8.00 – பி.ப. 5.00)

(C716057)

உங்களுக்கு ஏற்ற விலையில் வாகனத்தை கொள்வனவு செய்யுங்கள்

ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி
கலைமகள் சனசமூக விளையாட்டரங்கு,
மன்னார் வீதி, வவுனியா.



LOLC
மைக்ரோ கிரெடிட்

077 7358844 - திலீபன் 011 5118181 - நெலும் 077 3428332 - துமிது



வயாவிளான் புனித யாகப்பர் ஆலய நூற்றாண்டு விழாவில் நூற்றாண்டு மலரின் தொகுப்பாளர் அருட் திரு இ.மரியநாயகம் அடிகள் நூலை வெளியிட்டு வைக்க, யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பெற்றுக் கொள்கிறார். (ஓ-135)



அரியாலை ட்ரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது அம்பாள் வீதிவலம் வரும் காட்சி. (ஓ-135)



குருநகர் புனித யாகப் பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் புனிதரின் திருச் சொரூபப் பவனி யின் போது. (ஓ-51-07)



உரும்பிராய் காளி அம்பாள் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ வரிசையில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவின் போது அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்த போது... (ஞ)



காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் சமூக அபிவிருத்திக்கான பன்முக கட்டுமானத் தொகுதியின் திறப்பு விழாவில் சில காட்சிகள். (ஓ)



அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய விளையாட்டுப் போட்டியில் பலூன் உடைத்தல் போட்டியில் நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் பங்கு பற்றிய காட்சி. (ஓ-135)



புத்தூர் கு.குகனின் 'நிதர்சனம்' கவிதை நூல் வெளியீடு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் நூலை வெளியிட்டு வைத்து முதற் பிரதியை பேராசிரியர் தி.வேல்நம்பிக்கு வழங்குவதைக் காணலாம். (ஓ-11)



யாழ். மடத்தடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் சிலை திறப்பு விழாவின்போது, சிலையை உருவாக்கிய கலைஞர் ஜெயசீலன் (பாபு) யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும், 'தமிழின் புகழ்நாய்' நடன நிகழ்வின் ஒரு காட்சியையும் காணலாம். (ஓ-135)



அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற அமரர் பொன். சபாபதி நினைவு நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்ட பிரம்மஸ்ரீ ஜெக ஜெகதீஸ்வரக்குருக்கள், அருட்திரு அன்ரனி சில்வர்ஸ்ரார் அடிகள், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. செல்வராசா, கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவர் வே. இறைபிள்ளை ஆகியோர் இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணமுடிகின்றது. (க-18)

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் 16 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார். (க-421)





மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் மிருசுவில் தமிழ்தாசனின் 'யதார்த்தம்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இடம்பெற்றது. பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி என். றஞ்சனா சிறப்புப் பிரதியை வழங்குவதையும் காணலாம். (ஒ)



திக்கம் மத்திய சனசமூக நிலைய முன்பள்ளி கல்விக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் மூத்த பத்திரிகையாளர் எஸ்.தில்லைநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், சனசமூக நிலைய முன்னாள் தலைவர் க.திருவரங்கம் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் காணலாம். (ஒ-173)





நல்லூர் லயன்ஸ் கழக நடப்பு வருடத்துக்கான பதவியேற்பு வைபவம் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில் இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் லயன் தியாகராஜா நடப்பு வருட தலைவர் க. உலகநாதனுக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைப்பதையும், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி பாடசாலை புத்தகங்கள் கையளிக்கப்படுவதையும் உத்தியோகத்தர் பதவியேற்பதையும் காணலாம். (ஒ)



வடமராட்சி லயன்ஸ் கழக வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட உப ஆளுநர் லயன் டாக்டர் வை.தியாகராசாவுக்கு, வடமராட்சி லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் ஆ.சிவசுவாமி வாழ்த்துப்பாவைக் கையளிப்பதையும், மாவட்ட உப ஆளுநர் முன்னிலையில் புதிய உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதையும், வடமராட்சி லயன்ஸ் கழகத்துக்கு புதிய தலைவராகத் தெரிவான லயன் வி.சிவயோகன் உரையாற்றுவதையும் காணலாம். (ஒ-173)



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வளர்மதி சனசமூக நிலையத்தின் சுவிஸ் ஒன்றியப் பிரதிநிதி நா.நாகேந் திரம் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவுக்கு 20 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கினார். தொழிற் பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனிழந்த ஒருவரிடம் அவர் நிதியைக் கையளித்தார். (ஒ-288)



முல்லைத்தீவு குமுழமுனை முறிப்புக் கிராமத்தில் சுவிஸ் நாட்டின் உதவியுடன் செயற்படும் உதவிக் கரங்கள் அமைப்பின் மாலை நேர வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உரையாற்றுகின்றார். (க-18)



கிளிநொச்சி கோணாவில், யூனியன்குளம் காட்டுப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மரங்கள் வெட்டி எடுத்து வரப்பட்டபோது பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளைக் காண முடிகின்றது. (க-18)

## மரண அறிவித்தல்



### திருமதி தையலம்மா நடராசா

திருநெல்வேலி கிழக்கு, கெனடிலேனைச் சேர்ந்த திருமதி தையலம்மா நடராசா 15.08.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற மயில்வாகனத் தின் சகோதரியும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், மல்லிகாபூசணிதேவி, அரிச்சந்திரன், மாலாபூசணிதேவி, ரூபச்சந்திரன் (பிரியராம் பேக்கறி உரிமையாளர்), இராமச்சந்திரன் (பாறின்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் கமலாதேவி, காலஞ்சென்ற சுவாதீஸ்வரன் மற்றும் வசந்தமலர் (ஆசிரியை, மு/வித்தியானந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மிளா - மனோகரன் (ஜேர்மனி), குகநேசன் (முகாமைத்துவ உதவியாளர் - RDA), பரமேசன் (ஆசிரியர், மு/கைவேலி கணேசா வித்.), அகிலா (ஆசிரியை, அல்லைப்பிட்டி, பராசக்தி வித்.), ரஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), பிரியராம் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கோசிகா மற்றும் சாளினி, மிதுஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடிலேன்,
திருநெல்வேலி கிழக்கு. (50890) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# பெருமாள் கோயில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத் தின் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும். நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜனன பூசை மற்றும் தாலாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து சுவாமி வசந்த மண்டபத்துக்கு எழுந்தருள்வார். மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு விசேட பூசைகள் நடை பெற்று சுவாமி வெளி வீதியுலா வந்து அடியார் களுக்கு அருட்காட்சி வழங்கி உறியடி உற்சவம் இடம்பெறும். (ஓ)

♦♦♦

### இயக்கச்சியில்

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா நாளை திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நடைபெறும்.

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு விசேட அபிஷேகம் இடம்பெற்று பஜனை, சொற் பொழிவு, கண்ணன் பிறப்பு, உறியடி உற்சவம் ஆகியவை இடம்பெற்று நள்ளிரவு சுவாமி வீதியுலா வருவார். (ஓ-9)

♦♦♦

### கல்வயலில்

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநா யகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத் தில் கிருஷ்ண ஜெயந்தி நிகழ்வு நாளை திங் கட்கிழமை மாலை நடைபெறும். நிகழ் வில் விசேட அபிஷேக பூசையுடன் பஜனை, சமயச் சொற்பொழிவு ஆகியவையும் இடம் பெறும். (ஓ-9)

## செயலமர்வு

தென்மராட்சி, ஒக.17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் -2 வகுப் பில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான செயல மர்வு நாளை மறு தினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட் போர் கூடத்தில் இடம் பெறும். அன்றைய தினம் வலயத்தினால் உருவாக்கப்பட்ட ஆங்கிலமொழி செயல் நூல் வெளியீடும் இடம்பெறும். தரம் -2 வகுப்பில் ஆங் கில பாடம் கற்பிக் கும் ஆசிரியர்களைக் கலந்து கொள்ளு மாறு வலயக் கல் விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஓ-9)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வநாயகம் தெய்வசிகாமணி

திதி : 17.08.2014

தோற்றம் 30.03.1937 — மறைவு 09.08.2012


ஆருயிர் தந்தையின் அன்பலைகள் அகன்றிடுமா
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எம் தந்தையே
எம்மைப்பிரிந்து இரண்டு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் இனிமையான நினைவுகள்
எம் சுவாசக் காற்றில் என்றும் கலந்திருக்கும்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(51007)(7.6.3)

புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தையா தர்மலிங்கம்

(யாழ்ப்பாணம் ஸ்றோர்ஸ் தங்கோட்டுவ - NAK கந்தையாண்ணை)

கடந்த 19.07.2014 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் துயர்வுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் இரங்கற்செய்தி தெரிவித்தவர்களுக்கும், அன்னாரது இறுதிக்கிரியைகளின் போதும் இறுதியாத்திரையின் போதும் நேரடியாகக் கலந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர் கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (18.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேதரடைப்பு.
காரைநகர்.

(சி/16070)(4.3.6)

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




### A.JOHN BRITTO

Born 31.01.1948 — Died 17.08.2013

ஆவி துடிக்குதைய்யா! நெஞ்சு வலிக்குதைய்யா!
நீர் சாவில் போகவில்லை என்ற சந்தேகம் இருக்குதைய்யா!
கண்களிலே காயவில்லை ஈரம் இன்னும் - எம்
நெஞ்சினிலே ஆறவில்லை காயமின்னும்
அதற்குள் வந்ததா ஆண்டு ஒன்று!
விழித்திரை மேலதிலே இன்னும் உன்விம்பம்
விமர்சனங்கள் செய்கின்றன எமைப்பார்த்து
வழிகின்ற கண்ணீர் துடைக்க வந்தொரு வார்த்தை பேசு
விடை கொடுத்த வினாடிகளும் விம்மி அழுத நேரங்களும்
மாமா நீ வேண்டும் என்ற மரண ஓலங்களும்
மறந்திடுமோ அதற்குள்
கல்லறைதனிலே வந்து கதறி அழுகின்றோம்
காற்று வழியே கேட்கவில்லை கதறல் உமக்கு
ஓராண்டென்ன ஒரு ஜென்மம் போதாது உமை மறக்க எமக்கு!

அருமைச் சகோதரர்களும், மருமக்களும், மைத்துனர்களும்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 04 . 1981

மறைவு 17 . 08 . 2006

### அமரர் சுகுணராசா நிமலன்

எத்தனையோ ஆசைகள் எத்தனையோ எதிர்பார்ப்புக்கள்
எத்தனையோ நினைவுகள் அத்தனையும் ஒருநொடியில்
இல்லாமற் போயினவே!
நித்தம் நித்தம் உன் நினைவுகளுடன்
உனது ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.

(C/16046)(7.6.3)

கரந்தன்,
நீர்வேலி.

அம்மா, அப்பா, அண்ணா,
அண்ணி, அக்கா, அத்தான்,
மனைவி, மகன் மற்றும் மருமக்கள்

## மரண அறிவித்தல்



### திருமதி மங்கள்ஸ்வரி பத்மநாதன்

திருநெல்வேலி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி கேணியடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களேஸ்வரி பத்மநாதன் 11.08.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு பத்மநாதன் (ஓய்வுநிலை போதனாசிரியர் தொழில்நுட்பத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தங்கம்மா (திருநெல்வேலி) தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு-சிவபாக்கியம் (நீர்வேலி) தம்பதியரின் மருமகளும், சத்யா (நோர்வே), சந்திரசேகர் (பிரான்ஸ்), தாரணி (ஆசிரியை, நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), பரமேஸ்வரன் (செலான் வங்கி, மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனகேஸ்வரி (கனடா), பவளநாதன் (சவுதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் நடராசா (கனடா), காலஞ்சென்ற காங்கேசன் (பொறியியலாளர்) மற்றும் தணிகாசலம், சுசீலாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் தர்மராணி, பாபநாசிவம் (கனடா), கௌரிமனோகரி (கொக்குவில் இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், உதயராகினி (கனடா), உதயசங்கர், உஷாந்தினி, மைதிலி (ஆசிரியை, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்), மயூரன் மற்றும் கனடா வாழ் உமாதேவி, கதிர்காமநாதன், பிறேம்நாத் (பொறியியலாளர்), Dr. ஜனார்த்தனன், பங்கஜம், அபிராமி, பிரதீபன், பிரசாத், பிரகாஸ் ஆகியோரின் பெரிய தாயாரும், கணேசமூர்த்தி (நோர்வே), செல்வேந்திரன், ஜெயாழினி (பிரான்ஸ்), தேவிகா, கிரிதரன் (கனடா), குகபாலன் (பிரான்ஸ்), மகாதேவன் (மாவிட்டபுரம்), கலாஜினி (பிரான்ஸ்), பரந்தாமன் (பிரான்ஸ்), ஜெயச்செல்வி (கனடா), ஜெயரேகா (தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை) ஜெயமாதுரி (ஜேர்மனி), சுகந்தினி, சுதாயினி, சுபாஸ்கர், லவகாந் (நல்லூர் பிரதேச செயலகம்), கோபிநாத், செந்தூர்காந் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியும், தூயவன், பூரணி (நோர்வே), பிரியன், மதிஷா (பிரான்ஸ்), ரிஷிகேசன், சாருகேசன், பிரதாபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (50821) (7.6.3)

தகவல்:
தம்பு பத்மநாதன் (கணவர்)
021 223 0127, 077 381 5146

## மரண அறிவித்தல்



### கந்தையா சண்முகராசா

யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூர் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகராசா 15.08.2014 வெள்ளிக்கிழமை பிரான்ஸ்-பரிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாயன்மார்கட்டு திருநாவுக்கரசு-அமிர்தவல்லி தம்பதியரின் மருமகனும், கமலவேணியின் அன்புக் கணவரும், சுஜிதரன், முகுந்தன், முரளிதரன், சசிதரன், சிந்து ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிசில், மயூரா, ஹேலல் ஆகியோரின் மாமனும், அபினேஷ், மகீலா, லியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பரிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

திருமதி ச.கமலவேணி (மனைவி)
0033 1340 20773 (50898) (10.6.3)

தகவல்: மனோநாயகமும்
கலாநிதி கமலநாதனும்
மைத்துனர்கள். 076 607 1247
நாயன்மார்கட்டு, நல்லூர்.

## வீடு வாடகைக்கு

இல.153, பலாலி வீதி, கந்தர்மடத்தில் அலுவலக அல்லது நிறுவனங்களுக்கு உகந்த வாகன வசதி களுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

(50878) (12.3.6) தொடர்பு: 077 755 8340

## வாடகைக்குண்டு

இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் 2அறைகள், வரவேற்பறை, இணைந்த குளியலறையுடன் வீடும், 1000 (Sqft) சதுர அடி கொண்ட களஞ்சியமும், (Store) வாடகைக்குண்டு. Lava Hospital பின்புறம் தனி வழிப் பாதை, வாகனத் தரிப்பிடவசதிகள் கொண்டது. (50800) (12.3.6)

தொடர்பு:077 776 9260/077 232 8684

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகர் மத்தியில் மாட்டின் லேனில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக அல்லது வசிப்பிடமாக உபயோகிக்கக் கூடிய 1 ¾ பரப்புக் காணியில் ஒரு வரவேற்பறை, 3 அறைகள், (ஒரு அறை A/C) 2 குளியலறை, சமைய லறை, 10 வாகனங்கள் தரிப்பிடவசதி மற்றும் வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு இருக்கிறது. (50840)(4.6.3)

(தரகர்கள் தேவை. தக்க சன்மானம் தரப்படும்)

தொடர்பு: 077 911 0703, 021 222 8195

## தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வர்த்தக நிறுவனத்துக்கு A/L வர்த்தகப் பிரிவு (பொருளியல், கணக்கீடு, வணிகக் கல்வி) கற்ற பெண் பிள்ளைகள் தேவை. தகைமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
G.H.A.De சில்வா கம்பனி,
இல.64, பசார் வீதி, வவுனியா. (48965)(4.6.3)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நக்ரை அண்டிய பகுதியில் கல்வி நிறுவனம் (Professional Institution) நடத்துவதற்கு வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு அல்லது வர்த்தகக் கட்டடம் தேவை.

தொடர்பு: 077 738 2108 (50864)(4.6.3)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பஸ் நிலையம், போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் சகல வசதி களுடனும் கூடிய பெரிய ஒரு வீடு வாடகைக்குண்டு. குடியிருப்பதற்கும், நிறுவனங்களுக்கும் உகந்தது.

தொடர்பு: (50843) (12.3.6)
077 929 1959/077 921 3609

## வேலை வாய்ப்புகள்

**New Era Academy (London)**

இன் கற்கைநெறிகளான

01) Elocution Classes
02)Teacher Training Programme

என்பவற்றை விரிவுபடுத்த இருப்பதனால்

01)ஆங்கில ஆசிரியர்கள் (பயிற்சி வழங்கப்படும்)
02) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (பெண்கள் விரும்பத்தக்கது.)

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் இருந்து எதிர்பார்க்கிறோம்.

இல.18, நக்கா வீதி, சுண்டுக்குளி (போஸ்கோ ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)

(50669)(4.6.3) T.P:077 211 6733

## கடை வாடகைக்குண்டு

சாவகச்சேரி நகரில் (பஸாரில்) 25 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட பெரிய கடை வாடகைக்குண்டு. (50888) (4.6.3)

தொடர்பு:077 647 5536, 011 491 6614

## IELTS Classes

IELTS Classes are available in Jaffna and Vadamaradchi by a Specialized Trainer. Minimum band 6 is assured. Special care is given individually. Also Literature (O/L, A/L) Classes with practice on past paper questions. English grammar and spoken classes for Young Learners and Adults.

srirajkumark@gmail.com (50892)
077 326 9457/077 293 8422 (4.6.3)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி- பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500M (½ KM தூரத்திலும் ஆண், பெண் பாடசாலைகள், தபாற்கந்தோர், ரயில் நிலையம், சந்தை முதலியவற்றிலிருந்து நடந்து செல்லக் கூடிய தூரத்தில் பஸ்வசதியுடனும்)

7 துண்டங்களாக அமைந்துள்ள 75 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. துண்டங்களாகவோ (வரைபடமுள்ளது.) முழுமையாகவோ விரும்பியபடி வாங்க முடியும்.

உடனே தொடர்பு கொள்ளுங்கள்.
திருமதி யோகா நாகேந்திரம்,
கெருடாவில் கந்தசாமி கோயில் அருகில்,
பருத்தித்துறை வீதி,
கெருடாவில், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 077 160 1115
தரகர் தேவையில்லை. (சி/15782) (4.6.3)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1983 ரேவதி 3 ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற 5' 7" U.K.Citizen Bio Chemistry செய்து விட்டு International Dept. Collection Company இல் தொழில் புரியும் மணமகனுக்கு 26 அல்லது அதற்குக் குறைந்த வயதுள்ள மணமகளை லண்டனில்- ஐரோப்பிய நாடுகளில்- கொழும்பில் தகப்பனார் தேடுகின்றார்.

தொடர்பு: 071 839 7499 (50872) (4.6.3)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் 2 பரப்புக் காணியும், சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. (48967) (10.6.3)

தொடர்பு:
077 157 6877, 024 222 6523

## பதவி வெற்றிடம்

**NJ Groups**

நிறுவனத்தில் கீழ்க் கண்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. கிளை முகாமையாளர்கள், கணக்காளர்கள், கணினி இயக்குநர்கள், களப்பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வரவேற்பாளர்கள், சுத்திகரிப்பு உத்தியோகத்தர்கள் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய கிளை நிறுவனங்களுக்குத் தேவை. தொடர்புகளுக்கு:

(48986) (12.3.6) 077 330 3394/076 767 6772

## மணமகள் தேவை

பிறெஞ் டிப்ளோமற், (FRENCH Diplomat) பொறியியலாளர், திருமணமாகாதவர், திடகாத்திரமான, அன்பான, பணவசதியுடைய மணமகன்,மெல்லிய அழகான, 30-40 வயதுடைய மணமகளைத் தேடுகிறார். விவாகரத்துப் பெற்ற / பிள்ளைகள் உள்ளவர்களும் வரவேற்கப் படுவர்.பின்வரும் மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளவும். (50873)(5.6.3)

dsgovernment111@gmail.com

## VACANCIES
### SALES-EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

SALES EXECUTIVE

**Requirements**

* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

**Benifits**

- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

If you believe that you are the right cantidate,
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerhouse@gmail.com

(50895)(12.3.6)


## கால்வாய்கள் துப்புரவு

யாழ்ப்பாணம்,ஓக.17

நல்லூர் பிரதேச செயலக டெங்கு ஒழிப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத் திற்கமைவாக செங்குந்தா குளத்தைச் சேர்ந்த வாய்க்கால் மற்றும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைப் பகுதியில் உள்ள வாய்க்கால் பகுதிகளில் நல்லூர் பிரதேச சபை துப்புரவுப் பணிகளை முன்னெடுத்துள்ளது. (த-7)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

**JaffnaLaptop** **i7 COMPUTERS**




HP 15-i3
4th GEN/4GB RAM/500GB HD/
15.6LED/BAG
PRICE: 60000/=

124B, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
TEL: 021 2224959 FAX: 021 2224959
MOBILE: 0777683676 E-MAIL: i7cj@sltnet.lk WEB: www.i7c.com

அருட்சித்தர் குடைச்சுவாமிகளும், யோகமும் மனித மாண்பும்
மலர் வெளியீடு

காலம் : 18.08.2014 திங்கட்கிழமை காலை 9 மணி
இடம் : அகில இலங்கை இந்து மாமன்ற கட்டடம்.
இல.211, கோயில் வீதி, நல்லூர்.

அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

"அருள் பார் அருள் தெரியும்" (புறக்கண்ணால் அகக்கண்ணை திறக்கும் ரகசியம்)
"வெளிதனில் ஒளி பார்" (தலைமேல் பாயும் திருவருட்பேறு)

குடைச்சுவாமிகள் சேவை
இல.866, பருத்தித்துறை வீதி, நல்லூர். 077 491 1975, 077 760 7026

உபயம்: CEIKO MOTORS
No.185, K.K.S. Road, Kullapitty Junction. Kokuvil.
Tel: 0777 253 341

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதி, அரசடி ஒழுங்கையில் 4 அறைகள் கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு. (f/15790) (4.6.3)

தொடர்பு: 077 776 0663

## விற்பனைக்கு

6000 லீட்டர் பவுசர் Tank விற்பனைக்கு உண்டு (Tank மட்டும்). (வவுனியாவில்)

தொடர்பு கொள்ளவும்
0767 313 225 / 0772 596 611

## வாடகைக்கு / குத்தகைக்கு

யாழ். நகரில் வெலிங்டன் சந்தி, ஸ்ரான்லி றோட், கன்னாதிட்டிக்கும் சமீபமாக 6 அறைகளுடன் வீடு உண்டு, NGO, Institutes, Residential Purpose இற்கு மிகவும் வசதியான இடம். 2 வருட அட்வான்ஸ் தேவை. Repair வேலைகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: (C/15785) (10.6.3)
077 372 1190, 011 230 1356

## வைத்தியம்

நாள்பட்ட சகலவிதமான நோய்களுக்கும் சுகமாக்கும் வைத்தியம் சித்த வைத்தியர் Dr.R.Sivagurunathan ஞாயிறு, திங்கள், செவ்வாய் நாள்களில் நல்லூரில் சந்திக்கலாம்.

077 730 1669 சந்திப்பு இலவசம். (சி/15779)(4.6.3)


CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 124, பலாலி வீதி, திருநெல்வேலியில் புதிதாகக் கட்டப்பட்ட 3 மாடிக் கட்டடம் விற்பனைக்குண்டு. மொத்தமாக 1500 சதுர அடி Parking வசதிகளும் உண்டு

(C/15783) (10.6.3) 077 057 5454

## விற்பனைக்கு

இத்தாலி தச்சு வேலைப் பட்டறை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: (C/15788) (10.6.3)

077 609 2839, 077 8946757

## காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு கல்வயலில் 3 Bed Rooms, 2 Halls, Kitchen உடன் வீடும், 4½ பரப்புக் காணியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 724 469 (C/15780) (10.6.3)

## வீடு விற்பனைக்கு

சித்தன்கேணி சந்தி பிள்ளையார் கோயிலுக்கண்மையில் நல்ல சுற்றாடலில் சுற்று மதிலுடன் பயன்தரு மரங்களும் நன்னீர் கிணறும் 6½ பரப்பு நிலத்துடன் வீடு விற்பனைக்கு உண்டு.

(C/15789) (10.6.3) 0778 864 256

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் ஒட்டுமடச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் மூன்று களஞ்சிய அறைகள் (Stores) கொண்ட மூன்று பரப்புக்காணி உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 192 3430 (f/15773) (4.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) நல்ல அமைதியான சூழலில் காணி விற்பனைக்கு உண்டு. (50896) (7.6.3)

தொடர்பு :-072 959 6597

## கட்டடம் வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டு சந்தியில் 2 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. வங்கிகள், நிறுவனங்கள் போன்றவற்றிற்கு உகந்தது. போதிய வாகனத் தரிப்பிட வசதிகளுடன்.

தொடர்பு:077 486 0517 (50883) (4.6.3)

## விற்பனைக்கு

நான்கு மாதம் நிரம்பிய சினைப்பட்ட சனல் ஆடு. 1½ வயது நிரம்பிய JC இன் பசுக்கன்று, ஜேர்மன் சப்பேட், அல்சேசியன் ஆண், பெண் நாய் பொமேரியன் ஆண், பெண் நாய், வான் கோழி, மணித் தாரா, வெள்ளடியன் கோழி என்பன விற்பனைக்குள்ளன.

தொடர்பு:நீர்வேலி கந்தசாமி கோயில் பின் வீதி, அழகரத்தினம் L.மயூரன், நீர்வேலி தெற்கு.
021 490 3500/072 699 7331 (50899)(4.6.3)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இருவர் தங்கக்கூடிய இணைந்த குளியல் அறையுடன் கூடிய அறை வாடகைக்கு தேவை.

தொடர்பு:077 756 1346 (47252) (4.6.3)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியிலிருந்து கண்டி ஏ-9 அருகில் நுணாவில் கல்லடி மூடு ஒழுங்கையில் அமைந்துள்ள நிலப்பரப்பு 5 குழி 14 காணி விற்பனைக்குண்டு. ஆண், பெண் பாடசாலைகள், தபாற்கந்தோர், ரயில் நிலையம், சந்தை யாவும் ¾ KM தூரத்திற்குள் உள்ளன.

2014.08.19 இன் பின்னர்
077 558 1532 மற்றும் 075 997 6601 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.
தரகர் தேவையில்லை. (சி/15761) (4.6.3)

# பாஷாண உத்வாஷன சபிண்டீகரண அழைப்பு

சிவஸ்ரீ
## கனகசபாதேசிகர் சந்திரசேகரக் குருக்கள்



ஸ்ரீ ஜய வருடம் ஆடித்திங்கள் (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்கிரியைகளான பாஷாண உத்வாஷனமும், சபிண்டீகரண கிரியைகளும் (வீட்டுக்கிரியைகள்) நாளை (18.08.2014) திங்கட்கிழமை இடம்பெறும். காலை 5 மணியளவில் கல்லெடுப்பும் தொடர்ந்து 10 மணியளவில் சபிண்டீகரண கிரியைகளும் இடம்பெற்று, தொடர்ந்து மதிய போசனம் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி. (49736)(10.6.3) பாலச்சந்திரன் ஐயா மற்றும் குடும்பத்தினர்.


# Angel International School

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY
In God we trust
humedica

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை

School Re-Opening On 2nd September 2014

புதிய தவணை ஆரம்பம் 02.09.2014

New Addmissions are available from 25th August 2014

புதிய அனுமதிகள் 25.08.2014 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படும்

*Angel International School is the first and the largest International School in the Jaffna Peninsula with 1000+ Students.*










Phone:021-320-4024

**Contact information**

Director:Rev Sam Rajasuriar -0777238300

Principal:Dr.Noel A.Vimalendren.J.P 0772210173

e-mail:angelism2006@gmail.com

Website:aismanipay.info


# நாளை தேர்

யாழ்ப்பாணம், ஒக.17

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை இடம்பெறும். முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு சுவாமி தேரில் வீதியுலா வருவார்.

பிற்பகல் 1.30 மணிக்கு உறியடி உற்சவமும், இரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி அபிஷேக ஆராதனையும் இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மஞ்சத்தில் சுவாமி தீர்த்தமாட திருவடிநிலைக்குப் புறப்படுவார். (ஓ)

♦♦♦

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு இடம்பெறும். இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு சப்பரத் திருவிழா இடம்பெறும்.

நாளை மு.ப.10.30 மணிக்கு நாராயணப் பெருமாள் தேரேறி பவனி வருவார். தொடர்ந்து மாலை 7 மணிக்கு உறியடி உற்சவமும் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஓ-36)

# தேருக்குச் சென்ற பெண்ணின் சங்கிலி அபேஸ்

தென்மராட்சி, ஒக.17

ஆலய தேர் உற்சவத்தின் போது சுவாமி தரிசனத்துக்குச் சென்ற மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பெண்ணொருவரின் இரண்டு பவுண் சங்கிலி திருட்டுப் போயுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் கல்வயல் விளை வேலி துர்க்கை அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழாவின் போது இடம்பெற்றுள்ளது. தேர்ப் பவனியுடன் சென்ற குறிப்பிட்ட பெண் திருவிழாவின் பின்னர் வீட்டுக்குச் சென்றவேளையில் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலி காணாமற் போயிருந்தது. கூட்ட நெரிசலின் போது சங்கிலி அறுக்கப்பட்டிருக்கலாம்என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)


**அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை**

பலசரக்கு வியாபார நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள
★ சிட்டை எழுதுநர்
★ விற்பனை உதவியாளர் தேவை.

தொடர்பு: (50900)(10.6.3)
021 221 2041, 077 668 1670

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவர் 1500/=
நால்வர் 2500/=
(Attached Bathroom)
Hotal Villa City
422, Galle Road, Wellawatte
T.P 072 255 2222 (f/15793)(4.6.3)


# கிணற்றுக் கப்பி அறுந்து விழுந்து இரு கைகளும் முறிவு

தென்மராட்சி, ஒக.17

தண்ணீர் அள்ளும் போது கிணற்றுக் கப்பி அறுந்ததால் ஆழமான கிணற்றுக்குள் வீழ்ந்த நபரொருவரின் இரண்டு கைகளும் முறிந்தன. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பகல் மட்டுவில் தெற்கில் இடம் பெற்றுள்ளது.

கிணறு இறைக்கும் பணியில் ஈடுபட்ட வேளையில் இயங்க மறுத்த நீரிறைக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு வாளியில் தண்ணீர் எடுத்த வேளையில் கப்பி அறுந்து குறித்த நபர் கிணற்றினுள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயானந்தா (வயது-57) என்பவர் இரு கைகளும் முறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஓ-9)

# மரண அறிவித்தல்

## பாலசுப்பிரமணியம் மதியழகன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மாங்குளம், தச்சடம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மதியழகன் 15.08.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.08.2014 கொக்குவில் மேற்கு கனகரட்ணம் கண்மணியாகிய அவரது அப்பம்மாவின் இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கேணியடி, கொக்குவில் மேற்கு. (51006)(6.4.3) குடும்பத்தினர்.


**இர. சந்திரசேகரன் (சர்மா) M.A.,Sp.Sc.Trd**
**எழுதிய**
**"விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்"**

ஐந்தாம் பதிப்பு வெளிவந்துள்ளது. பலரின் தன்னம்பிக்கையை வளர்த்து அவர்களை வாழ்வில் உயர்த்திய நூல்.
மாணவர், பெற்றோர் என அனைவரும் படிக்க வேண்டிய நூல்.
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம், நல்லூர், கொழும்பு.
ஸ்ரீலங்கா புத்தக சாலை யாழ்ப்பாணம், கொழும்பு.
ஆசிரியர்: 077 616 2052 (51008)(10.6.3)

# KANDY HOMES & Construction

நவீன வடிவமைப்புக்களில் உங்களது விருப்பத்திற்கு அமைய எண்ணம் போல அழகிய வீட்டினை வாஸ்துசாஸ்திர முறைப்படி நாம் அமைத்துக் கொடுக்கின்றோம்.



❋ 15 வருட கால அனுபவம் வாய்ந்த சேவைத்துறையில்

❋ தற்பொழுது எமது நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளினையும் கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளையும் நேரில் பார்வையிடலாம்.



81. Pallaly Road,
Illupaiyadi Junction,
Jaffna.
T.P :- 0777462889, 0777463469, 0217917623
Email :- kandyhomes11@gmail.com

# தென் கிழக்கு ஐரோப்பாவில் முதல் முறையாக வேலை வாய்ப்புக்கள் செர்பியா

| S/N | CATEGORY | Qty | Salary (Euro) | Salary (RS) |
|---|---|---|---|---|
| 1. | ஆயுர்வேத Doctors (ஆண் / பெண்) | 12 | 1000 | 175,000.00 |
| 2. | தெரப்பிஸ்ட் உதவியாள்கள் (ஆண் / பெண்) | 34 | 500 | 87,500.00 |

மிக விரைவில் வெளிநாட்டு அதிபரால் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

(01 Eur = Rs.175/-)

1. உணவு தங்குமிடம் மருத்துவம் வழங்கப்படும். 2, நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலை கிழமைக்கு 6 நாட்கள் வேலை மேலதிக கொடுப்பனவு
3. 3 வருட ஒப்பந்த கால முடிவில் இரு வழி விமான சீட்டு வழங்கப்படும். 4 அனைத்து நிபந்தனைகளும் சேர்பியா நாட்டு சட்ட திட்டத்திற்கு உட்பட்டது

A. ஆயுர்வேத Doctorற்கான தகமை (Diploma) மற்றும் இரண்டு வருட அனுபவம் B. தெரப்பிஸ்ட் உதவியாளர் அனுபவம் தேவையில்லை. புதிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்களுடைய விபரக்கோவை, பாஸ்போர்ட் மற்றும் 6 சிறிய அளவிலான வர்ண படத்துடன் நேரில் வரவும்.

WESTERN AGENCY No.33-1/1F, Manning Place, Wellawatte, Colombo - 06 ( Near the 141 Bus Halt )
Tel : 0711-994622, 0773-526922. (சி/15784)(4.3.6) E-mail : westernagy@sltnet.lk

# வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் மனித மாண்பைப் பேணுவோம்

## மன்னார் ஆயர் அழைப்பு

மன்னார், ஓக.17

மனித மாண்பு இன்று மதிக்கப்படாத நிலையையே பார்க்கின்றோம். மனித மாண்பு முதலில் குடும்பங்களிலிருந்து உருவாகவேண்டும் என்பதைச் சிந்தித்து வடக்கு-கிழக்கு தமிழ் மறைமாவட்டங்களில் இவ் வருடம் "குடும்பங்களில் மனித மாண்பை பேணுவோம்" என்ற சிந்தனையில் நாம் ஈடுபட்டுக் கொண்டுவருகின்றோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மடுத் திருவிழாவில் மறையுரை வழங்கும் போதே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தனது மறையுரையில், மனித மாண்பைக் குடும்பங்களில் போணுவோம். குடும்பங்களில் மட்டுமல்ல இந்த மாண்பை அனைவரும் மதித்து வாழ வேண்டும். இந்த சூழலிலே மனித மாண்பு பேணப்படாததையே பார்க்கின்றோம்.

மனிதன் பிறவாதிருக்கவேண்டும் எனப் பல காரியங்களைச் செய்து கொண் டிருக்கின்றனர். உலகத்திலே கருவில் தரிக்கும் குழந்தைகள் வாழ முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தக் குழந்தைகளை எப்படி அழிக்கின்றார்கள். சிறு குழந்தைகளின் கால்களை வெட்டி இழுத்துக் கொன்ற நிலையில் வெளியில் எடுக்கின்றனர். இப்படியாகக் குழந்தைகள் வாழ முடியாது செல்கின்றனர். ஒரு தாயும் தகப்பனும் ஒன்று சேர்ந்து வாழும்போது இறைவன் மனித மாண்பை உணர்ந்து குழந்தையை வழங்குகின்றார். அந்த குழந்தை உருவாகும் முதல் நாளே அந்த குழந்தைக்கு மாண்பு இருக்கின்றது. உரிமை இருக்கின்றது. அது வாழ்வதற்கு. இப்படியாக பல்வேறு தீயகாரியங்கள் மனித மாண்புக்கு எதிராக உரிமைகள் மறுக்கப்பட்டு, மறைக்கப்படுகின்றன. மனித மாண்பு மதிக்கப்படுகின்றமைக்குப் பதிலாக அவமதிக்கப் படுகின்றது. வடக்கு-கிழக்கிலுள்ள நான்கு தமிழ் மறைமாவட்டங்களிலும் மனித மாண்பை குடும்பங்களில் பேணுவோம் என்ற கருப் பொருளிலே இந்த வருடம் சிந்தித்து செயற்படுகின்றோம்-என்றார். (த)

---

## கண்ணீர் அஞ்சலி



தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவர்
**த. பத்மநாதனின்** பாசமிகு துணைவியார்

**மங்களேஸ்வரி பத்மநாதன்**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்..

**அருள்மிகு இராஜராஜேஸ்வரி**
**ஆலடி பழைய அம்பாள் தேவஸ்தானம்,**
**நீர்வேலி வடக்கு.**

(51054)
(10.6.3)

---

## மரண அறிவித்தல்



**ஒப்பிலாமணி பாலசிங்கம்**

**(முன்னாள் கிளை முகாமையாளர்**
**காரைநகர் ப.நோ.கூ.சங்கம்)**

காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் இலந்தைசாலை காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட, ஒப்பிலாமணி பாலசிங்கம் நேற்று (16.08.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஒப்பிலாமணி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் நாவலக்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்களான செல்லையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், இராமகிருஷ்ணன் (ஆசிரியர் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம்), ஜானகி (பிரான்ஸ்), இராதகிருஷ்ணன், சித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநாதன் (பிரான்ஸ்), இரத்தினலீலா, சற்குணராசா (இலண்டன்), ஆகியோரின அன்பு மாமனும், கோபிகா, மயூரதன், தனரூபன், தமிழினி, நவநீதன், யாதவன், கம்சாஜினி, தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கண்மணி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோடிலிங்கத்தின் (முன்னாள் முகாமையாளர், காரைநகர் ப.நோ.கூ.சங்கம்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17/08/2014) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இலந்தைசாலை**
**காரைநகர்** (51057)

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

---

## வாடகைக்குண்டு

121 A கோயில் வீதியில் 7 பரப்புக் காணியில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
**077 634 1525, 077 932 8969**

(51065)
(10.6)

---

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவில் 3 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(51052)
(10.6)

தொடர்பு:
**077 203 3443**

---

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



**திருமதி இலட்சுமி கணபதிப்பிள்ளை**

கடந்த (04.07.2014) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி இலட்சுமி கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 24.07.2014 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன, அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

பெரியதம்பிரான் கோவில்,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (51064)(10.6)

**குடும்பத்தினர்.**

---

## தேவை


எமது நிறுவனத்துக்கு வீதி வேலை செய்வதற்காக கிரவல் மணல், 6"x9" கருங்கல், 6"x4" கருங்கல் 2"x2" கருங்கல் இடிபாடுகள் தேவை.

தொடர்புகளுக்கு: **077 015 5318**

**குமரன் பில்டேர்ஸ்**
**கருவேப்புலம் வீதி, திருநெல்வேலி.**
(51053)(10.6)

---

## மரண அறிவித்தல்



**வைரமுத்து சிவபாலன்**

**(தவிசாளர், மத்தியஸ்தர் சபை, சமாதான நீதிவான், கலாபூசணம், கலைவாருதி)**

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சிவபாலன் 16/08/2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவண முத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கேசவன் மற்றும் ரமணன் (ரமணன் ஸ்ரூடியோ, மருதனார்மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சிகாவின் மாமனாரும், செல்வராணி, கிருஸ்ணபாலு ஆகியோரின் சகோதரனும் தங்கராசா, கலைவாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17/08/2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொட்டடி, சங்கானை.**
**0776916137** (51063)

**தகவல்:**
**ரமணன் (மகன்)**

---

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

**பதவிவெற்றிடங்கள்: கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)**

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நயினாதீவு, மருதங்கேணி, கைதடி, முள்ளியான், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சங்கானை, மண்டைதீவு, அச்சுவேலி)

01) **தகைமைகள்:**
க.பொ.த.(சா/த)
**(பாதுகாப்பு சேவை அனுபவம் உள்ளவர்களுக்கும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் முன்னுரிமையும் கல்வித்தகைமையில் விலகல் அளிக்கப்படும். பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)**

02) உயரம்: 5' 4"குறையாமல் இருத்தல் வேண்டும்.

03) 23 வயதிற்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

04) சம்பளம் :(I) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
(II) EPF+ETF வழங்கப்படும்.

நேர்முகப்பரீட்சை 19.08.2014, 20.08.2014 (செவ்வாய், புதன் கிழமைகள்) ஆகிய நாள்களில் மு.ப.10.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரை கீழ் காணப்படும் அலுவலகத்தில் நடைபெறும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

01) கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம் (06 மாதங்களுக்கு உட்பட்டது)
02) தேசிய அடையாள அட்டை
03) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
04) கல்விதாரதரப்பத்திரம்/பாடசாலை அதிபரின் நற்சான்றுப்பத்திரம்

இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை**
**261/6, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி/16074)(6.4.3)

---

## லொறி விற்பனைக்கு

1. 41 ஸ்ரீ CANTER 12 ½ அடி அலுமினிய பொடி நல்ல நிலையிலுள்ளது.
2. KE 4 சிலிண்டர் அலுமினிய பொடி LEYLAND 19 அடி
3. 207 LA TATA அலுமினிய பொடி

**077 895 9566**

(51059)
(10.6)

---

## வேலையாள்கள் தேவை

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக இராமநாதன் வீதி, போட்டோ பிரதி இயக்குநர், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்த இருபாலாரும் உடன் தேவை. (அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

17.08.2014 - 21.08.2014 ஆம் திகதிக்கு முன்னராக நேரில் வரவும்.

தொடர்பு:
**077 952 2444, 021222 6951**

(51058)
(10.6)

---

## Eeswaa Digital Photo பணிநிலை வேண்டுகை

★ வடிவமைப்பாளர்
★ கணினி தட்டெழுத்தாளர்
★ அச்சு இயந்திர இயக்குநர்
★ அச்சு இயந்திர உதவியாளர்

**நேர்முகத் தேர்வு:**
**18.08.2014 பி.ப 2 - 6 மணிவரை**

**தொடர்பு:**
**இல. 172, 174 இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி.**
**021 222 0233, 077 543 7217,**
**077 165 9845** (51060)(10)

---

## வேலை வாய்ப்பு

எமது நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் உள்ள தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு. அனைத்து பிரதேச மக்களும் விண்ணப்பிக்கலாம். உணவு, பாதுகாப்பான தங்குமிடம் குறைந்த விலைகளில் வழங்கப்படும். (கடுவெல/பியகம/சபுகஸ்கந்த/அவிசாவெல/பஸ்யால/ஜாஎல/பேலிய கொட/மருதானை / நுகேகொட/வத்தளை/தங்கொட்டுவ/குருநாகல்/பாணந்துறை) பிரதேசங்களில் ஜாம்/ரொபி/பிஸ்கட்/பால்மா/கண்ணாடி/சிம்காட்/பொலித்தீன்/காமென்ட்/கிளவுஸ் போன்றவற்றிற்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியப் பிரிவுகளுக்கு 18-55 வயது ஆண்/பெண் தேவை. சம்பளம் 18,000/=, 38,000/= வரை. தொழில் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

(48969)(7.6.3)

தொடர்பு: 077 431 2176-நிர்மா, 077 817 6234-பவித்ரா, 077 022 4156-மது, 077 111 6770-ப்ரீ

---

## உடனடி வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்/ரொபி/சொக்லேட்/பால்மா/டிபிடிபி/கிளவுஸ்/Printing/PVC போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியம்/Loading/un Loading போன்ற பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்/பெண் தேவை. சம்பளம் 18,000/=, 32,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். (நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) குறிப்பாக இம்முறை A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : 077 683 8231 (வைதேகி)

(48968)
(7.6.3)

---

ROYAL ENFIELD
SINCE 1901




**THE LEGEND RIDES IN**

உலகில் மிக பழைமைவாய்ந்த மோட்டார் சைக்கிள் நிறுவனமாகிய "ரோயல் என் பீல்ட்" தொடர்ச்சியான தயாரிப்புகள் இப்பொழுது இலங்கையிலும்.

காட்சியறை /உதிரிபாகங்கள் /சேவை நிலையம்

பேஸ்லைன் வீதி, கிருளபனை, கொழும்பு 05.
தொடர்புகளுக்கு: 0755 077 242 (அசாம்)
HOTLINE : 0717 730 888 e mail : royalenfield@eureka.lk

ROYAL ENFIELD




உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கொடிய போரின் எச்சங்களாக நட்டாற்றில் விடப்பட்டுள்ளோம்

## வடமாகாண சபை உறுப்பினர் கவலை



வவுனியா, ஓக. 17

போரின் கோர முகத்தால் நாம் எமது சொந்தங்களை இழந்து அங்கவீனர்களாக போரின் எச்சங்களாக எமது சொந்த மண்ணில் ஆதரவற்று விடப்பட்டுள்ளோம். நாம் நமது உழைப்பில் எழும்பி நிற்க முன் இந்த அரசால் தள்ளி விழுத்தப்பட்டுள்ளோம் என வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கவலை தெரிவித்தார்.

விஸ்வமடு பிரதேசத்தில் எதிர்காலப் பசுமை உலகம் எனும் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் நாற்பதுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரின் முடிவில் உலக உணவு நிறுவனம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியது. எமது மக்களை நாம் பார்த்து கொள்வோம் எனக் கூறிய இந்த அரசு எமது மக்களுக்கான நிவாரணத்தை நிறுத்தி நட்டாற்றில் விட்டது.

400 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களும் தனிநபர்களும் தாயக மக்களுக்கு உதவி செய்தார்கள் என்ற காரணத்துக்காக இலங்கை அரசின் தடைப் பட்டியலில் பெயரிடப்பட்டனர். இந்த அரசு மக்கள் நலன் திட்டங்களில் ஈடுபட விடாமல் வடமாகாண சபையின் தமிழர் அரசு மீது பல இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது.

எமக்கென்று ஒரு மாற்றம் வரும். அதுவரை நாம் காத்திருக்கவேண்டிய நிலையில் இருக்கின்றோம்-என்றார். (த).

# மக்களை வதைக்கிறது வறட்சி அசமந்தப்போக்கில் மஹிந்த அரசு

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 17

நாட்டின் பல பகுதிகளில் நிலவுகின்ற வறட்சி காரணமாக 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், விவசாய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

18 இலட்சத்து 36 ஆயிரத்து 430 பேர் இவ்வாறு வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் வடமேல் மாகாணத்திலேயே நிலைமை மோசமாக இருக்கின்றது.

கிழக்கில் மட்டக்களப்பும், ஊவவில் மொனராகலையும் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் இடர் முகா மைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இயற்கை பேரழிவுகள் காரணமாக குடும்பங்களின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இயற்கை இடரை எதிர்நோக்கிய பகுதி மக்கள் மத்தியில் கடன் சுமை அதிகரித்துள்ளதாகவும், பயிர்ச் செய்கைக்கு போதிய நீர் இல்லாததும் பிரச்சினையாகவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள உலக உணவு திட்டம், இவற்றின் காரணமாக விவசாயத்தின் மூலமாக கிடைக்ககூடிய வருமானம் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக் கவில்லை என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன. இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,

நாட்டின் சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில் அரசு இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு வெவ்வேறு நிகழ்வுகள் மற்றும் காரணங்களுக்காக பணத்தை செலவிடுகின்றது. நீரின்றி இருக்கும் மக்களுக்கு பணத்தை செலவிடவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜே.வி.பியும் அரசு மீது குற்றச் சாட்டுகளை முன்வைத்துள்ளது.

# இத்தாலிக் கடலில் மூழ்கி இலங்கையர் இருவர் சாவு

கொழும்பு, ஓக. 17

இத்தாலியில் விடுமுறையைக் கழிக்க கடலில் குளிக்கச் சென்ற இலங்கையர்கள் குழு ஒன்றில் சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் கபாஸி கடற்கரையில் இவர்கள் பொழுது போக்கச் சென்றனர் என்றும், இதன்போது கடலில் குளித்த போது கடும் காற்று மற்றும் நீரோட்டத்தில் அடித்து செல்லப்பட்ட இருவர் காணாமல்போயினர் என்றும், இருவரும் பின்னர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட் டனர் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் 38,44 வயதுகளையுடைய சகோதரர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

## தொடர்ச்சிகள்

### இராணுவம்

வாக்கைப்பயன்படுத்திச் சீருடையினரைக் கொண்டு தன்னுடன் சண்டை போட்ட நபரைத் தாக்கியும் உள்ளார்.

இராணுவத்தின் அச்சம் காரணமாகப் பாதிக்கப்பட்ட நபர் பிரச்சினையை வெளியில் சொல்ல முடியாது இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான குறித்த இளைஞன் தன்னுடன் சண்டை போட்ட குடும்பஸ்தரை ஈச்சமோட்டைப் பகுதிக்குத் தேடிச் சென்றுள்ளார். ஓட்டோ சாரதியான குடும்பஸ்தர் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்துக்கு முன்பாகவுள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் தனது ஓட்டோவை நிறுத்தி வைத்திருப்பவர்.

எனினும் அன்றையதினம் தரிப்பிடத்தில் அவர் இல்லாத காரணத்தால் ஆத்திரமடைந்த இளைஞன் சனசமூக நிலையத்துக்குள் புகுந்து அங்கிருந்த மேசைகள், கதிரைகளை அடித்து நொருக்கியுள்ளதுடன் முன்னால் இருந்த மரங்களையும் வெட்டிச் சாய்த்து விட்டுச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்துடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

தான் இராணுவம் எனவும், தன்னை யாரும் கேள்வி கேட்க முடியாது எனவும் தெரிவிப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறினர்.

இந்த நிலையில் குறித்த இளைஞனால் சனசமூக நிலையம் முற்றாகத் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அப்பகுதி கிராம சேவையாளர் ரமணனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பில் வெளியில் எந்தத் தகவலும் கூறவேண்டாம் என மேலிடத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் தன்னால் இது தொடர்பில் எதுவும் கூறமுடியாது எனத் தெரிவித்தார்.

குறித்த சனசமூக நிலையக் கட்டடத்துடன் சேர்ந்தே கிராம சேவகர் அலுவலகமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சும்பவம் தொடர்பில் அப்பகுதி மக்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (த-14)

### நாட்டில்

கப் பொலிஸ் பேச்சாளர், அந்த மாணவன் தன்னைத் தானே பின்னங்கைகளைக் கட்டிக் கொண்டு தாக்கிக்கொண்டார் என்றும், தனக்குத்தானே பிளேட்டால் கீறிக்கொண்டார் என்றும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். இவ்வாறு ஒரு அறிக்கை தயார்படுத்தப்படுவதைக் கடந்த வெள்ளிக்கிழமை நடாளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணையின் போது நான் எதிர்வு கூறியிருந்தேன். அவ்வாறே நடந்தேறியும் உள்ளது.மாணவன் காயமுற்றிருந்த செய்தி கேட்டு சிரேஸ்ட மாணவரான வவுனியாவைச் சேர்ந்த மாணவன் யோகநாதன் நிரோஜன் எனபவர் அவரைப் பார்க்கச் சென்றதற்காகக் கைது செய்யப்பட்டு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். சக மாணவரைச் சந்திப்பது குற்றமா? அது ஒரு மனிதாபிமானச் செயற்பாடாகப் பொலிஸாருக்குத் தெரியவில்லையா? அவ்வாறு சந்தித்தவரையும் கைது செய்தது ஏன்?

பொலிஸாரின் செயற்பாடுகள் அனைத்தும் அரசியல் மயப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றன.

இலங்கை அரசுக்குச் சாதகமாக இயங்கக்கூடிய பௌத்த பிக்குகள் எவ்வளவு தீவிரவாதப் போக்கைக் கொண்டிருந்தாலும் அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். அவர்களுக்கு ஆதரவாகப் பொலிஸாரும், இராணுவத்தினரும் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் அரசுக்கு எதிராகச் செயற்பட்டால், புத்த பிக்குவைக் கூட தமக்குத் தாமே சுன்னத் செய்து கொண்டதாகவும், தம்மைத் தாமே தாக்கிக் கொண்டதாகவும் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்ததாகக் கூறுகின்றார்கள்.

இதேபோலத்தான் சமுர்த்தி உத்தியோகத்தர் தம்மைத் தாமே மரத்தில் கட்டிவைத்துக் கொண்ட சம்பவமும் இந்த நாட்டில்தான் அரங்கேறியது. இவற்றை எவ்விதமான வெட்கமும் இல்லாமல் பொலிஸ் பேச்சாளர் வெளியிடுவது, பொலிஸார் மீதுள்ள கொஞ்ச நஞ்ச மதிப்பையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டியவர்கள் தாக்குதலுக்குள்ளானவர்களையே கைது செய்வதும் அவர்களை அச்சுறுத்தி ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதும் வேடிக்கையானதும் கேலிக்குரிய செயற்பாடுகளாகவும் இருக்கின்றன. இத்தகைய ஆச்சரியமான விடயங்களை இலங் கையில் மட்டுமே நாம் காண முடிகின்றது.

அரசினதும் அரச இயந்திரங்களினதும் இத்தகைய நடவடிக்கைகள் நாட்டில் எத்தகைய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதுடன் அரசே இனவாதத்தைத் தூண்டுகின்றது என்ற முடிவிற்கும் இந்த நாட்டு மக்கள் வருவதற்கு வழிவகுத்துவிடும் என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் - என்றுள்ளது. (த-5)

### புலிப்பார்வையை

பிரதமர் ராஜிவ் காந்தி நல்லவர். அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதய சுத்தியுடன் செயற்பட்டார். போர் நிரந்தரமான தீர்வாகாது. ஈழத்து மக்கள் மக்கள் கஷ்டத்தின் காரணமாக இலங்கை இராணுவம் புதைத்த கண்ணி வெடிகளை எடுத்துவந்து புலிகளிடம் கொடுத்து காசு வாங்குவார்கள் போன்ற காட்சிகளும் கதைக் களமும் புலிப் பார்வை திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளன.

இதனால் இந்தப் படத்தை நிறுத்துமாறு மாணவர் அமைப்புக்கள் தொடர்ச் சியாக போராடி வந்தன. உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் மேற்படி திரைப்படத்தில் 75 சத வீதமான காட்சிகள் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

மேலும், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக்கழகம், வை.கோவின் ம.தி.மு.க, மே 17 இயக்கம், உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கம், தமிழக சட்டக்கல்லூரி மாணவர்கள், தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு, மற்றும் மாணவர் இளையோர் இயக்கம் ஆகியனவும் இந்தப் படம் திரையிடப்படக்கூடாதென்று வலியுறுத்தியிருந்தன.

இந்த நிலையில் இந்தத் திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை 9 மணிக்குச் சத்தியம் திரையரங்கில் இடம்பெற்றது. இதில் ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுப்பதாக காட்டிக் கொள்ளும் நாம் தமிழர் கட்சியின் சீமான் மாத்திரம் பங்கெடுத்திருந்தார். ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவின் பெயர் இடம் பெற்றிருந்தபோதும் அவர் பங்கெடுக்கவில்லை. ஏனைய ஈழ ஆதரவு அமைப்புக்கள் எதுவும் பங்கெடுக்கவில்லை.

இந்த நிலையில் திரைப் பட இறுவட்டு வெளியீடு முடிவடைந்த பின்னர், படம் தொடர்பிலான கேள்வி கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன்போது மாணவர் அமைப்பின் சார்பில், பாலச்சந்திரனைச் சிறுவர் போராளியாக சித்தரிப்பது தொடர் பில் கேள்வி எழுப்பப்பட்டது. உடனடியாக விழா ஏற்பாட்டாளர்களும், நாம் தமிழர் கட்சியின் சீமான் உள்ளிட்டவர்களும் மாணவர்களை அரங்கை விட்டு வெளியேறுமாறு பணித்தனர்.

இதனையடுத்து சீமானின் தொண்டர்களும், பாரிவேந்தனின் ஐ.ஜே.கே. கட்சியின் தொண்டர்களும் மாணவர்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். இதன்போது அங்கு நின்றிருந்த பொலிஸார் தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இந்தத் தாக்குதலில் மாணவர் அமைப்புக்களைச் சேர்ந்த 10 மாணவர்கள் வரையில் காய மடைந்தனர்.

அவர்கள், தம்மைத் தாக்கியவர்களைக் கைது செய் யும் வரையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (த-5)

### சிறுபான்மைக்

ஒன்றில் நேற்றிரவு இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு தமிழ், முஸ்லிம் மலையகத் தழிழர் ஆகிய மூன்று சிறு பான்மைக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனை எந்தவொரு கட்சியும் புறந்தள்ளாது கவனத்தில் கொள்ளவேண்டும். குறித்த சிறுபான்மைக் கட்சிகளின் தலைமைகள் அதில் தெளிவாக இருக்கவேண்டும். ஏனெனில் போர்க்காலத்தை விட தற்போதுதான் சிறுபான்மை இனங்களுக்குப் பிரச்சினை முற்றியுள்ளது.

எதிர்காலத்தில் புதிய அரசியல் போக்கு சிறுபான்மையின மக்களிடம் துளிர் விடவேண்டும். இதன் மூலமாக கடந்த கால அரசியல் தோல்விகளைச் சீர்செய்யலாம் அதற்குச் சிறுபான்மையினங்கள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறே பெரும்பான்மை இனங்களில் சிங்களக் கடும்போக்குவாதத்துக்கு எதிராக உள்ள மக்களையும் நாம் ஒன்று சேர்ப்போமானால் பெருவெற்றி பெறமுடியும். எனவே எதனையும் பேச்சுக்களாகவே செயற்படுத்தாது செயலில்காட்ட முற்படுங்கள் - என்றார். (த-4)

### வவுனியாவில்

இருந்து வெளியே சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக அவரது உறவினர்கள் சிலருடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டு வந்த நிலையிலேயே இவர் காணாமற்போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-402-421)

### 'டைனமற்'

மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின் குறித்த 12 மீனவர்களையும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியதோடு குறித்த மீன்களையும் மன்றில் ஒப்படைத்தனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், குறித்த மீனவர்களைச் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தோடு மீன்களை அழித்து விடுமாறு கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய குறித்த மீன்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மீன் பரிசோதனைக்காகக் கொழும்பு பகுப்பாய் வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும், அதன் அறிக்கை கிடைத்ததும் இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி மன்னார் நீதி மன்றத்தில் இடம்பெறும் போது அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.எஸ்.மெராண்டா மேலும் தெரிவித்தார். (த-56)

# கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 17
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் யாழ்.மாவட்ட மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிரதம விருத்தினராக வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன், சிறப்பு விருத்தினராகக் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை இணைப்பாளர் எல்.அனுராகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ரி-23)



புத்தூர் கலைமதி அணியினர்



ஆவரங்கால் இந்து இளைஞர் அணியினர்

## இன்றைய ஆட்டங்கள்

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து சக்திவேல் விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக் அணியும் மோதவுள்ளன.

மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை திக்கம் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூவக்கரை கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23-108)

* * *

தும்பளை கருணையுள்ளம் விண்மீன்நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23-108)

* * *

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பிரிவு 3 இற்கான நான்காவது சுற்று ஆட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை கண்டி பொலிஸ் பாரக் மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்.மத் திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி நுகவெல மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. (ரி-23)

# சென்சேவியர், வல்வை அடுத்த சுற்றுக்குத் தகுதி

கரணவாய், ஓக. 17
நிரோஜன் தொடர்ச்சியாகவும் அதிரடியாகவும் 4 கோல்களைப் போட 4:2 என்ற கோல் அடிப்படையில் சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக் கழகம் குடத்தனை செல்வா விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்தது. மற்றுமொரு ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் அடிப்படையில் நாகர் கோயில் நாகதீபம் விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகமும் குடவத்தை செல்வா விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இந்த ஆட்டத்தில் 3 ஆவது நிமிடத்திலேயே சென்.சேவியர் விளையாட்டுக்கழக வீரர் நிரோஜன் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் இறுக்கமடைய மீண்டும் 10 ஆவது நிமிடத்தில் எதிரணியின் தடுப்பரண்களைத் தகர்த்துச் சென்று இரண்டாவது கோலையும் போட்டார் நிரோஜன்.

இதனைத் தொடர்ந்து மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் 2:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கியதும் வீறு கொண்டெழுந்த செல்வா விளையாட்டுக்கழகம் தமது அணிக்காக 35 ஆவது நிமிடத்தில் மதுவின் மூலமாக முதலாவது கோலைப் போட்டது.

ஆனாலும் மீண்டும் தனது புயல் வேகத்தைக் காட்டிய நிரோஜன் 50ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டார்.

இதற்குப் பதிலடி கொடுக்குமாற்போல் செல்வா விளையாட்டுக் கழக வீரர் மது மீண்டும் ஒரு கோலைப் போட்டு தமது அணியின் கோல் எண்ணிக் கையை 2 ஆக உயர்த்தினார்.

இதன் பின்னர் இரு அணிகளின் விளையாட்டிலும் அனல் பறந்தது. போட்டியை எப்படியாவது சமனிலையில் முடிக்க வேண்டும் என்று செல்வா விளையாட்டுக் கழகத்தினரும், இல்லை நாமே வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் சென்சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது சென். சேவியரின் கதாநாயகன் நிரோஜன் மேலும் ஒரு கோலைப் போட 4:2 என்ற அடிப்படையில் அந்த அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகமும் நாகர் கோயில் நாகதீபம் விளையாட்டுக்கழக 'பி' அணியினரும் மோதினர்.

இடைவேளைக்கு முன்னர் வல்வை விளையாட்டுக் கழகமே முன்னிலை பெற்றிருந்தது. அந்த அணி சுரேன் மூலம் ஒரு கோலையும் வசீகரன் மூலம் 2 கோல்களையும் பெற்று முன்னிலையில் இருந்தது.

இதனால் ஆட்டம் 3:0 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணியினரும் தமது உச்சத்திறன்களை வெளிக் காட்டி விளையாடிய போதும் மேலதிக கோல்களைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. இதனால் 3:0 என்ற அடிப்படையில் வல்வை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(5-108)



## சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 17
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் யாழ். மாவட்ட மட்டத்திலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி 25:20, 25:19, 23:25, 25:17 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)



ரி.டி.எஸ். நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவு உத்தியோகத்தர்களினால் நடத்தப்படும் பயிலுநர், பயிற்றுவிப்பாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் நேற்று சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. இதில் மருதங்கேணி சாவகச்சேரி பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள் வலைப்பந்தாட்ட பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (ரி-23)

# பிரியும் வேளையில் இணைந்த ஜோடி



கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனது இறுதியாட்டத்தை விளையாடி வருகிறார் சரித்திர நாயகன் மஹேல ஜெயவர்த்தன. இப்பிரிவு வேளையில் மீண்டும் இணைந்தது இலங்கையின் மிகச்சிறந்த இணைப்பாட்ட ஜோடியான சங்கா-மஹேல. நேற்றைய நாள் நிறைவுக்கு வரும் வரை இந்த ஜோடியைப் பிரிக்கமுடியாமல் போராடியது பாகிஸ்தான் .

இரண்டாம் நாள் நிறைவில் 6 இலக்குகள் இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய தினம் ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி ஹேரத்தின் சுழலுக்கு சுழன்றாடியது. தனது முதல் இன்னிங்ஸில் அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 332 ஓட்டங்களைப் பெற்று 12 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. இலங்கை அணியின் பந்துவீச்சைச் சமாளித்து ஆடிய சர்பிரஷ் அகமட் 103 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் தில்ருவான் பெரேரா ஒரு இலக்கினைக் கைப்பற்ற ஏனைய 9 இலக்குகளையும் தன் சுழலுக்கு இரையாக்கினார் ரங்கண ஹேரத்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த அடித்தளத்தை இட்டனர். முதலாவது இலக்குக்காக 54 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது உப்புல் தரங்க 45 ஓட்டங்களுடன் வெளியேறினார். மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கௌசல் சில்வாவும் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சங்கா-மஹேல இணைப் பாட்டத்துக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நேற்றைய நாள் ஆட்ட நேர நிறைவு வரை இணைபிரியாமல் களத்திலிருந்த இந்த ஜோடி 98 ஓட்டங்களைப் பகிர்ந்து கொள்ள இலங்கை அணி 2 இலக்குகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றது. சங்கக்கார 54 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 49 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். வீழ்த்தப்பட்ட இருஇலக்குகளையும் பாகிஸ்தானின் அப்துர் ரெஹ்மான் கைப்பற்றியிருந்தார். (ரி)

# 125 வருட சாதனையை முறியடித்தார் ஹேரத்



நடைபெற்று வரும் பாகிஸ்தானுக்கெதிரான ஆட்டத்தில் 9 இலக்குகளை ஒரே இனிங்ஸில் கைப்பற்றியதன் மூலம் புதிய சாதனையைப் படைத்திருக்கின்றார் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கண ஹேரத்.

நேற்று நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் இறுதி விக்கெட்டை வீழ்த்திய போது குறித்த இன்னிங்ஸில் 127 ஓட்டங்களைவிட்டுக் கொடுத்து 9 ஆவது இலக்கைக் கைப்பற்றினார். இடதுகைச் சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் ஒரு இன்னிங்ஸில் அதிகூடிய இலக்குகளைக் கைப்பற்றுவது இதுவே முதன்முறையாகும். இதற்கு முன்னதாக 1889 இல் இங்கிலாந்து அணியின் ஜோனி பிரிக்ஸ் தென்னாபிரிக்க அணிக்கெதிராக 11 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 8 இலக்குகளைக் கைப்பற்றியிருந்ததே சாதனையாக இருந்து வந்தது. இதன் மூலம் 125 வருடங்களின் பின்னர் அவரது சாதனையை முறியடித்திருக்கிறார் ஹேரத். இவ் ஆட்டத்திலேயே 250 டெஸ்ட் இலக்குகள் என்ற சாதனையையும் இவர் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# தொடரும் சொதப்பல் கோபத்தில் கவாஸ்கர்



இந்திய அணி இங்கிலாந்தில் விளையாடிவரும் டெஸ்ட் தொடரில் தொடர்ந்தும் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. தொடரின் 3ஆவது மற்றும் 4ஆவது ஆட்டங்களில் படுதோல்வியடைந்து பலரின் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய வீரர்கள் தமது தவறுகளைத் திருத்திக் கொண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மீண்டும் பொறுப்பற்ற வகையில் விளையாடி மோசமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். 90 ஓட்டங்களுக்கே 9 இலக்குகளையும் இழந்து இறுதியில் டோனி, இசாந்த் சர்மாவின் உதவியுடன் 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்திய அணியின் இவ்வாறான மோசமான ஆட்டத்தால் கடும் கோபத்திற்கு உள்ளாகியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், நடந்து முடிந்த டெஸ்ட் போட்டிகளில் பல தவறுகளை செய்து இந்திய அணி தோல்வியடைந்த நிலையில் தற்போது நடைபெறும் டெஸ்ட் போட்டியிலும் அதே தவறுகளை மீண்டும் செய்து வருகிறது. இந்திய வீரர்கள் யாரும் மன ஒருமைப்பாட்டுடன் விளையாடவில்லை என்பது அவர்களது மோசமான துடுப்பாட்டத்தில் இருந்து புலப்படுகிறது. வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தில் அந்நாட்டின் ஆடுகள தன்மையை அறிந்து மன ஒருமைப்பாட்டுடன் விளையாட வேண்டும். ஆனால் இந்திய வீரர்கள் மனரீதியாக தங்களை இன்னும் தயார்ப்படுத்திக் கொள்ளாததால் தொடர்ந்து மோசமாக விளையாடுகிறார்கள். தற்போது இந்திய அணிக்கு துடுப்பாட்டம் தான் பெரிதும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது என்று தனது கோபத்தை வெளிப்படுத்தினார். (ரி)

# பெண் செயலாளருடன் தொடர்பு சிக்கிக்கொண்ட இலங்கை வீரர்



இலங்கைக் கிரிக்கெட் அணியின் பெண் செயளாலரின் அறைக்குச் சென்றமை தொடர்பாக அவ் அணியின் வீரர் கித்துருவன் விதானகே சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளார். இவ் விடயம் தொடர்பாக அவர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இத் தொடரின் முதல் ஆட்டம் காலியில் நடைபெற்றது. அதன்போது கித்துருவான் விதானகே இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பெண் செயலாளர் தங்கியிருந்த விடுதி அறைக்கு சென்றிருந்ததாக சர்ச்சை ஏற்பட்டது. தற்போது இந்த விவகாரம் தொடர்பாக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவம் தொடர்பாக இலங்கை அணியின் மூத்த வீரர் ஒருவரும் முறைப்பாடு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ரி)

# முன்னிலை பெற்றது இங்கிலாந்து

ஓவல் மைதானத்தில் நடைபெற்றுவரும் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

ஆட்டத்தின் முதல் நாள் தேநீர் இடைவேளையின் பின்னர் முதல் இனிங்ஸில் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப ஜோடி சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கியது. முதல்நாள் ஆட்டநேர நிறைவின் போது இங்கிலாந்து அணி இலக்குகள் இழப்பின்றி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி அணி 4 ஓட்டங்களை மேலதிகமாக சேர்த்திருந்த போது சாம் ரொப்சன் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இரண்டாவது இலக்குக்காக ஒன்று சேர்ந்த குக், பலன்ஸ் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கடக்க உதவினர். இவர்களுக்கிடையில் 125 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த போது அலெஸ்டயர் குக் 79 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் அடுத்தடுத்து இலக்குகள் சரிக்கப்பட 229 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது. ஹரி பலன்ஸ் 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 6ஆவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த ஜோ ரூட் 36 ஓட்டங்களுடனும், ஜோஸ் பட்லர் 28 ஓட்டங்களுடனும் செய்தி அச்சுக்கு போகும் வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து 5 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்று 141 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது. இந்திய அணி சார்பில் வருண் ஆரொன், அஸ்வின் தலா 2 இலக்குகளையும், இசாந்த் சர்மா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் 79 ஓட்டங்களைக் குவித்த இங்கிலாந்து அணியின் அலெஸ்டயர் குக், டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணிக்கெதிராக அதிகூடிய ஓட்டங்களைக் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார். இவர் இந்தியாவுக்கெதிராக 20 ஆட்டங்களில் 54.21 என்ற ஓட்ட சராசரியில் 1735 ஓட்டங்களைக் குவித்துள்ளார். (ரி)



## காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அருகில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 842 1168 (50790) (45.6.3)

## தேவை

யாழ்ப்பாணத்தில் கார் ஓடுவதற்கு நன்கு அனுபவமுள்ள (குறைந்தது 3 வருட அனுபவம்) சாரதி ஒருவர் தேவை.
தொடர்பு: 077 381 8799 (48961)(4.6.3)

## - ALLIANCE FRANÇAISE DE JAFFNA -

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள். அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS.

பிரான்ஸ் செல்வோர் விரை...கள்...உடன் அழையுங்கள்...
021 222 8093 61, கச்சே... - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## கடை வாடகைக்கு

யாழ். பிரதான வீதியில் நிறுவனங்கள்/ அலுவலகங்களுக்கு ஏற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
T.P:
077 941 6639

## Mega Sale

ARPICO DAMRO

ஆடி தள்ளுபடி
இன்று மட்டும்
என்றும் எங்கும் கிடைக்காத
அமோக விலை குறைப்பு
மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

## BSc Engineer & Technical Officer தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பாடசாலை ஒன்றுக்கு மூன்றுமாடிக் கட்டடம் நிர்மாணத்தை மேற்பார்வை செய்வதற்கு **BSc Engineer** (கட்டட நிர்மாணத்தில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது).
Technical Officer **NDT** or அதற்குப் பதிலான தகைமையுடன் உடனடியாகத் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: **No.245, Kasthuriyar Road, Jaffna.**
**0777 797 546** (50833) (10.6.3)

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

**IELTS**
ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends

- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்த வசதி
- IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

**City & Guilds A1 B1**
Duration: 48 hrs Week/ Week ends

- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்றமுடியும்.

Certificate In
**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends

- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல்திறனை வளர்த்துக் கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs

- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்துகொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியவை விசேட செயல்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்.

**Weekdays: 11.08.2014 | 14.08.2014 || Weekends: 10.08.2014 | 16.08.2014**
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடி, நாவாந்துறை, கண்ணபுரம் பகுதியில் (வில்லூன்றிப் பிள்ளையார் கோயில்) சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வீடு விற்பனைக்குண்டு. யாழ் நகருக்கு அண்மையில் நல்ல சூழலிலும் அமைந்துள்ளது விலை 25 இலட்சம்.
**தொடர்பு:**
**021 221 9618**
**077 304 9635**

## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், வவுனியா

**வாகன ஏல விற்பனை**

திகதி 23.08..2014
இடம் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், வவுனியா கிளை பூங்கா வீதி, வவுனியா
நேரம் மு.ப. 10.00 மணி முதல்

**வாகனங்களின் விவரங்கள**

43-2XXX - TOTOTA HIACE - Diesel
48-7XXX - TOTOTA HIACE - Diesel

ஒகஸ்ட் 18ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை திங்கள் முதல் வெள்ளி வரையான கிழமை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை எமது அலுவலகத்தில் வாகனங்களை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு: **024-2223304/077-6967865/077-4694841**

**விதிகள்**

***நுழைவு***

ஏலம் நடைபெறும் தினத்தில் நபர் ஒருவருக்கு மீள் செலுத்தப்படாத 1000 ரூபாவும் மற்றும் மீள் செலுத்தப்படும் 5000 ரூபா வைப்புக்கள் கொடுப்பனவுகள்

- ஏலத்தின் பின் மீளப்பெறமுடியாத ஆரம்ப வைப்பாக ஏலத்தொகையின் 30% ஐ செலுத்த வேண்டும் மிகுதி 70% பணத்தினை ஒகஸ்ட் 25 முதல் 27ஆம் திகதிகளுக்குள் மாலை 3.00 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்தில் செலுத்தி வாகனத்தை பொறுப்பேற்றுக்கொள்ளலாம.
- எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஏலத்திலிருந்து வாகனங்களை திரும்பப்பெற ஏலக்குழுவுக்கு உரிமை உண்டு.
- ஏலம் விடுபவரின் முடிவே இறுதியானது

கிளை நிறைவேற்று அதிகாரி,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வவுனியா கிளை,
பூங்கா வீதி, வவுனியா.

(48962) (12.3.6)

## இலங்கையில் ஆடவர் ஆடைகளில் முதன்மை வகிக்கும் Signature இன் 50% தள்ளுபடி விற்பனை

The Achiever's Choice




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இணுவில் திருப்பதி
# அருள்மிகு வேங்கடேஸ்வரர் திருக்கோயில்
# மருதனார்மடம்





## கிருஷ்ணஜெயந்தி பெருவிழாவும்
## உறியடி உற்சவமும்
## நாளை
## (18.08.2014)
## திங்கட்கிழமை



எப்போதெல்லாம் அதர்மத்திற்கு ஆக்கமும், தர்மத்திற்கு அழிவும் ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் நான் யுகம் யுகம் தோறும் தோன்றுவேன் என்ற ஸ்ரீகிருஷ்ண பகவானின் வாக்கிற்கிணங்க, ஸ்ரீமத் நாராயண பகவான் ஸ்ரீகிருஷ்ணனாக இந்தப் பூலோகத்தில் அவதரித்த நாளே இக்கிருஷ்ண ஜெயந்தி நன்னாளாம். இந்நாளில் இணுவை திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் திருவேங்கடபெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

**நாளை 18.08.2014 காலைப் பூஜைகள்**

காலை 6.00 மணிக்கு திருவேங்கட பெருமானுக்கு விஷேட அபிஷேகம்
காலை 8.00 மணிக்கு விஷேட பூசை, உபசாரமும், ஆராதனைகளும்
காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



**மாலைப் பூஜைகள்**

மாலை 4.30 மணிக்கு பூசை
மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூசை
மாலை 5.30 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான்
மங்கல வாத்தியங்கள், உபசாரங்கள் சகிதம் உறியடி உற்சவத்திற்கு புறப்பாடு.
மாலை 6.00 மணிக்கு உறியடி உற்சவம்
மாலை 6.45 மணிக்கு ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு நிவேதனம், உபசாரம், நாட்டிய சமர்ப்பணம்.
மாலை 7.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை
ஸ்ரீ கிருஷ்ணபகவான் தங்கத் தொட்டிலில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருட்காட்சி இடம்பெறும்.
இவ்வேளை கோவிந்த நாம பஜனையும் இடம்பெறும்.
இரவு 9.00 மணிக்கு தாலாட்டு உற்சவமும் பிரசாதம் வழங்கலுடன் விழா நிறைவுறும்.

அடியார்கள் திருவேங்கடப்பெருமானின் அபிஷேகத்திற்குத் தேவையான பொருள்களை
18.08.2014 காலை 6.00 மணிக்கு முன்பே
ஆலயத்தில் சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தர்மகர்த்தா சபையினர்** **உபயகாரர்கள்.**

(C/15168)(7.6.3)

**அனுசரணை :**

**Santhi Textiles**
**சாந்தி புடவை அகம்**
Dealers in all kinds of Textiles & Readymade Garments,
Sarees & Shalwar Kameez
No. 157, 158, Modern Market,
(Power House Road), Jaffna. Tel : 021 222 2045
Branch : K.K.S. Road, Kondavil, Tel : 021 224 1590

**அண்ணா தொழிலகம்**
அண்ணா மல்லிக் கோப்பி,
உலகத் தரம் வாய்ந்த பொதிகளில் உங்கள் வசதிக்கேற்ப எமது விற்பனை முகவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
ANNA INTERNATIONAL (PVT) LTD.
214/5, Messenger Street, Colombo - 12. துரை வீதி,
Tel:- +94112424877, + 94112436063 இணுவில்.

**சக்திவேல் ஹாட்வெயார்**
*Sakthivel Hardware*
கட்டடத்திற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் (பெயின்ற் வகைகள் உட்பட) ஒரே கூரையின் கீழ் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில் (இணுவில்)
தொ.பே : 021 492 1213, 14, 15

# நீங்கா நினைவலையில் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி பிலோமினா வின்சன்டிபோல்

மலர்வு
24.08.1940



உதிர்வு
17.08.2008

அன்போடு எம்மை அரவணைத்து
பண்போடு எம்மை வளர்த்து
பாரினிலே உயர வைத்தீர் அம்மா!
வருடங்கள் ஆறு ஆனதம்மா!
ஆறவில்லை எம் காயம்
மூவிரண்டு ஆண்டுகள் கடந்தாலும்
ஆறாத துயருடன் பயணிக்கின்றோம்
உணர்வால் உள்ளத்தால் எம்மோடு
வாழும் தெய்வமாகி
எங்கள் இனிய உறவுகளின் வற்றாத
ஜீவ ஊற்றாகி, ஒளியாகி எமக்கெல்லாம்
வளியாகி வாழ்கின்றீர் எம் இதயங்களில் என்றும்
அம்மா! எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கின்றது உங்கள் முகம்
எம் நெஞ்சினிலே காவியமாய் கண்ணியமாய்
வாழ்ந்தீர்கள் இப் புவியினிலே
உம்மைக் காலமெல்லாம் நினைத்திருப்போம்
உம் உறவுகள் யாம்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"
(யோவான் 11 : 25)

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**


கடற்கரைவீதி, பருத்தித்துறை.

(47203)(45.6.3)

---

# நினைவஞ்சலி

10ஆவது ஆண்டு 33ஆவது ஆண்டு



**சுப்பிரமணியம் கந்தையா**
(ஆயுர்வேத வைத்தியர்)

**தங்கச்சியம்மா கந்தையா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழும் வழியை எமக்குப் புகட்டி
தெய்வத்துள் தெய்வமாய் உறைந்த
உங்களை என்றும் எம் இதயக் கோயிலில்
இருத்தி வணங்கும்.


வாலையம்மன் கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
Melbourne - Australia
Email: kumrajes@yahoo.com.au

அன்பு மகன்
**கந்தையா குமாரசாமி**
**குடும்பத்தினர்**

(51001)(7.6.3)

---

# மரண அறிவித்தல்



## சிவசாமி நாகராசா

**(ஓய்வுபெற்ற - இ.போ.ச.சாரதி)**

இல. 19, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் இல.09 மாட்டின் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி நாகராசா நேற்று முன்தினம் (15.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - சுமித்திரை தம்பதியரின் மூத்த புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னு தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பரமேஸ்வரி, சண்முகலிங்கம் மற்றும் மகேந்திரநாதன், சற்குணமூர்த்தி (மணிக்குரல் உரிமையாளர்), புவனேஸ்வரி ஜெகதீஸ்வரி, கணேஷலிங்கம், சர்வேஸ்வரி, காலஞ்சென்ற நடேசலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியகுமார், பிறேம்குமார், வாசுகி, ஜெனக்குமார், ராஜ்குமார், சிவக்குமார், உதயகுமார், செல்வகுமார், நந்தகுமார், வாண்மதி ஆகியோரின் தந்தையும் Dr.ராஜதுரை, தியாகராஜா, பாலசந்திரன், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், செல்வலிங்கம், மற்றும் சிவபாக்கியம், ராஜலெட்சுமி, வர்ணகுலசிங்கம், ரஜேஸ்வரி, சிவலிங்கம், சரோஜினிதேவி, ஆஷாதேவி, லீலாவதி, பாமாருக்மணி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பெருமாள், காலஞ்சென்ற கனகறெட்ணம் மற்றும் யோகறெட்ணம் ஆகியோரின் சகலனும், பாலராசா, சிவரூபன், ஞானேஸ்வரி, மங்கள கௌரி, பவானி, சரசகலா, வேதவல்லி, பிரதீபா, அஜித்ரா, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனும், கஜேந்தினி, கஜேந்திரன், தஷாயினி, கேசவன், விஜிதன், பவிதா, வினுஜா, லோகதாரணி, கிஷோக்குமார், லக்ஷ்மன் பாலகுமார், மனோகரி, கீதாஞ்சலி, கேசவன், வராகி, திலீப்குமார், தினேஷ்குமார், விதுஷ்குமார், றிதிஸ்குமார், சரத்குமார், சாய்குமார், சஞ்ஜித்குமார், சத்தியா, கிஷோபன், பிரணவன், அட்சயா, வர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், ராவிக்குமார், அபிராமி, துர்க்கா, தினேஷ்குமார், யதீஷ்குமார், நிதிஷனன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாட்டின் லேனில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.09, மாட்டின் லேன்,**
**யாழ்ப்பாணம்.**

(49969) (45.6.3)

தகவல்:
**பிள்ளைகள்.**

# விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்கள்

**STUDENT VISA 100%**
(Genuine Student Only)



## June, July, September - Any other intake

- இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! நீங்கள் விரும்பும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக் கடிதம் மிகவிரைவில் இயலுமான செலவில் நாம் பெற்றுத் தருவோம்.
- எமது விரைவான, வசதியான, இலாபகரமான சௌகரியமான சேவையை இன்றே நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- எமது பயிற்சி பெற்ற சட்ட வல்லுநர்கள் புதிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக விசா தொடர்பான சகல கருமங்களையும் செய்து தருவார்கள்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**வங்கியில் பணவைப்பு**
Saving book, Fixed Deposit, Statement

**UK, USA, AUSTRALIA, CANADA, NEW ZEALAND & All other Countries**

எவ்வித முற்பணமும் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளைப் பெறலாம்.

**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

FLEX Graphic

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

(ஏ 15787) (45.6.3)

**Hotline: 0777 711 905**



# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## VISIT VISA

- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கல , அமங்கல காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், பேர்த்தியர்களுக்கான சுப்பர் விசா - கனடா, மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.



ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**தாமதமாகிய விசாக்கள் - நிராகரிக்கப்பட்ட விசாக்கள் உள்ளனவா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சினை உள்ளதா?**

**Refused? Rejected?**

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்புப் பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travel Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

**வங்கியில் பணவைப்பு**
*Savings Book, Fixed Deposit, Statement*
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

## உங்களின் விசா எங்களின் சவால்

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

**Hotline: 0777 711 905**



வரணி மத்திய கல்லூரியின் இசுறு பாடசாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாடிக் கட்டடங்கள் இரண்டையும் திறந்து வைப்பதற்காக வருகை தந்த மத்திய கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தனவை கல்லூரி அதிபர் மங்களேஸ்வரன் மாலைசூடி வரவேற்பதையும் அவருடன் வருகை தந்த பிரமுகர்கள் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதையும் காணலாம். (ஓ-122)



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகை வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதனுக்கு சிறப்புப் பிரதியை வழங்குவதையும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவிகளின் நாட்டிய நிகழ்வையும் காணலாம். (ஓ-173)



நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் பு.கணேசராஜாவின் எழுத்துரு, நெறியாள்கையில் 'மர்ம முடிச்சு' என்னும் நாடகம் அகில இலங்கை தமிழ்த்தின போட்டியில் இரண்டாவது தடவையாக முதலிடம் பெற்றது. மேற்படி நாடகக் குழுவினரைக் காணலாம். (ஓ)



கிளிநொச்சி மாவட்டச் செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையினர் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு "சிறுவர் பாதுகாப்பு"த் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வை பாடசாலைகளில் நடத்தி வருகின்றனர். அந்த வகையில் கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலயத்தில் சபை அலுவலர் இ.செந்தூரன் கலந்து கொண்டு சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களையும் காணலாம். (ஓ-9)



ஆவரங்கால் சிவன் கோயில் பூங்காவனத் திருவிழாவில் காலஞ்சென்ற பிரபல பாடகர் சீர்காழி கோவிந்தராஜனது மகன் டாக்டர் கோ.சிவசிதம்பரத்தின் இசைக்கச்சேரி நடைபெற்றது. சிவசிதம்பரத்துக்கு திருவிழா உபயகாரர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம். (ஓ-11)



சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக நடத்தும் இலவச புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்குத் தொடரில் 6 ஆவது கருத்தரங்கு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்களையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் கருத்தரங்கின் வளவாளர்கள் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (ஓ-86)





சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது... (ஓ-9)



வலைப்பாடு தூய அன்னாள் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலியை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில், கிளி/ முல்லை மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை யாவிஸ், அன்பக இயக்குநர் அருட் தந்தை ஸ்ரான் பிலிப் மற்றும் பல குருக்கள் ஒன்றிணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். பங்கு மக்கள் மற்றும் அன்னையின் பரிந்துரை பெற வேண்டி வந்த அனைத்து மக்களும், அன்னையின் விசேட பரிந்துரை பெற்றுச் சென்றனர். (ஓ)